மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

மலர் 3 | 1 - 3 - 55 | இதழ் 21



வழக்கு மன்றத்தில் கலிலியோ

ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

சிறையில் பூனை வளர்ப்பு

அறிஞர் அண்ணா அவர்கள், மும்முனைப் போராட்டத்தின் விளைவாக மூன்று திங்கள் சிறைத் தண்டனை ஏற்றுச் சென்னைச் சிறையில் இருந்த போது, பொழுதுபோக்குக்காகக் கொண்டிருந்தவைகளிலே பூனை வளர்ப்பு ஒன்றாகும்.

சிறைச்சாலைக்குச் சென்ற சிலநாட்களில், ஒரு தாய்ப்பூனை இரண்டு குட்டிகளை அழைத்துக் கொண்டு, நாள்தோறும், இரவில், அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த கட்டிடம் பக்கம் வருவதும், அறைகளில் ஏதேனும் இருக்கிறதா என்று தேடுவதும், பிறகு போய்விடுவதும் ஆன காட்சி அறிஞர் அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனால் அந்தப் பூனைகளுக்கு ஏதேனும் உணவு திரட்டிவைத்திருக்க வேண்டும் என்ற இரக்க உணர்வு அவருக்குப் பிறந்தது.

அன்று முதல் அண்ணா அவர்கள் நாள்தோறும் தமக்குக் கொடுக்கப்படும் பாலில் ஒரு பகுதியைப் பூனைகளுக்கென்று ஒதுக்கிவைக்கத் தொடங்கினார்கள். தாய்ப்பூனையும் இரண்டு குட்டிகளும் வரும்போது, அவர் அறையின் இரும்புக் கதவுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு, ஒரு அலுமினியக் கிண்ணத்தை இரும்புக் கம்பிகளுக்கிடையில் விட்டு, வெளியே வைத்து, அதனைக் கம்பிகளுக்கருகில் தள்ளிவைத்துக்கொண்டு, உள்ளே இருந்தபடியே நீண்ட குவளையிலிருக்கும் பாலை அந்தக் கிண்ணத்தில் ஊற்றுவார்கள்.

தாய்ப்பூனை முதலில் குட்டிகளைச் சாப்பிடவிட்டுவிட்டுத் தான் காத்துக் கொண்டிருக்கும். அந்தக் குட்டிகளில் ஒன்று பருத்து வலிவுள்ளதாகவும், மற்றொன்று மெலிந்து வலிவற்றதாகவும் இருந்தன. வலிவுள்ள குட்டி வலிவற்ற குட்டியை அப்பால் தள்ளிவிட்டுத்தானே பாலையெல்லாம் குடிக்க முயலும். அப்பொழுது தாய்ப்பூனை வலிவுள்ள குட்டியை அப்பால் தள்ளிவிட்டு வலிவற்ற குட்டி சாப்பிடுவதற்கு இடம் ஏற்படுத்திக் கொடுக்கும். குட்டிகள் இரண்டும் சாப்பிட்டு முடிந்ததற்குப்பிறகுதான் தாய்ப்பூனை குடிக்க முயலும். பால் மிச்சம் இருந்தால் குடிக்கும்; இல்லையானால் குட்டிகளை அழைத்துக் கொண்டு போய்விடும். இந்தக் காட்சி அறிஞர் அண்ணாவுக்கு வியப்பையும், பொழுதுபோக்கையும் தரும்.

பிறகு இரண்டு கிண்ணங்களில் இரண்டு குட்டிகளுக்கும் தனித் தனியே அண்ணா அவர்கள் வைத்தார்கள். பருத்த குட்டி தனக்கு வைத்த பாலை அவசர அவசரமாகக் குடித்துவிட்டு, மெலிந்த குட்டிக்கு வைத்த பாலை குடிக்க முயலும். அப்பொழுது அண்ணா அவர்களும் தாய்ப்பூனையும் பருத்த குட்டியை அப்பால் அனுப்பிவிட்டு மெலிந்த குட்டி குடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்கள். பிறகு தாய்ப்பூனை வெளியே படுத்திருக்கக் குட்டிகள் இரண்டும் உள்ளே வந்து விளையாடும். இரவில் நீண்டநேரம் தூக்கம் வராத அண்ணா அவர்களுக்கு இது பொழுதுபோக்காக இருக்கும்.

கடைசி சில நாட்களில் மெலிந்த பூனைக்குட்டி வராமல் தாய்ப்பூனையும், பருத்த குட்டியும் மட்டுமே வந்தன. இரண்டு மூன்று நாட்கள் கழித்து கேட்டறிந்தபோது அந்தப் பூனைக்குட்டியை யாரோ அடித்து இறந்துபோய்விட்டது என்று தெரியவந்தது. அந்தச் செய்தியைக் கேள்வியுற்ற அறிஞர் அண்ணா அவர்கள் எதையோ பறிகொடுத்துவிட்டது போன்ற இரக்க வுணர்வோடு இரண்டு மூன்று நாட்கள் காணப்பட்டார்கள்!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1 - 3 - 55 செவ்வாய்க்கிழமை

பேரூர் முடிவுகள்

20 - 2 - 55-ஆம் நாள் கோவையை அடுத்த பேரூரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம், இப்போதைய நிலைமைகளை ஆராய்ந்து தேவையான முடிவுகளை எடுத்திருக்கிறது.

இந்திய அரசியலாரின் போக்கைக் கண்டித்துத் தி. மு. கழகத்தின் எதிர்ப்பைக் காட்டும் 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டனநாள்' தீர்மானமும், நாடகச் சட்டத்திற்கு எதிராகத், தேவையானால் சட்டப்படியும், கிளர்ச்சியின் மூலமும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தைப் பொதுச்செயலாளரிடம் ஒப்படைக்கும் 'நாடகச் சட்டத்' தீர்மானமும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், தொழிலாளர்கள் உள்ள பகுதிகளில் தொழிற்சங்கங்களை நிறுவிப் பணியாற்றுவதற்கான ஊக்கத்தை ஊட்டும் 'திராவிடத் தொழிற்சங்கத்' தீர்மானமும், 1955-ஆம் ஆண்டு சூன் திங்களில் திருச்சியில் அடுத்தத் தி. மு. க. மாநில மாநாட்டைக் கூட்ட அனுமதி அளிக்கும் 'மாநில மாநாடு' தீர்மானமும் மிக முக்கியமானவைகளாகக் கருதப்படவேண்டியவைகளாகும். இவற்றைத்தவிர ஆவடிக் காங்கிரசு மாநாட்டில், காங்கிரசுக் கட்சியினர் நிறைவேற்றியுள்ள 'சோசியலிச மாதிரி'த் தீர்மானம் வெறும் கண்துடைப்புத் தீர்மானந்தான் என்பதைச் சுட்டிக்காட்டும் தீர்மானமும், தி. மு. க. சட்ட திட்டத் திருத்தம் பற்றிய தீர்மானமும் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்' தீர்மானத்தில் கண்டுள்ளபடி 20-3-55-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையைக் கண்டனநாளாகக் கொண்டு, ஐந்தாண்டுத் திட்டம், வளர்ச்சித் திட்டம், தேசிய திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் பேரால் வடநாட்டை வளமாக்கவும், தென்னாட்டைத் தேயவைக்கவும் முனைந்துள்ள இந்தியப் பேரரசின் போக்கைச் சுட்டிக்காட்டிக், கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி இந்திய அரசியலார்க்கும், சென்னை அரசியலார்க்கும், தி. மு. க. தலைமை நிலையத்திற்கும் கிளைக் கழகங்களெல்லாம் அனுப்பிவைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்னை அரசியலார் கொண்டுவந்த நாடகத்திருத்தச் சட்ட மசோதா இன்றைய சூழ்நிலைக்கு அவசியமில்லை என்றும், அது நிறைவேறுமேயானால் பகுத்தறிவு நெறியினர் நடத்தும் நாடகங்களை எளிதாகத் தடைசெய்வதற்கு வைதீக அதிகாரிகள் மனமாறுபாட்டின் காரணமாக முயலக்கூடும் என்றும், நாடகம் நடத்துவோர் வழக்கு மன்றங்களில் ஏறி இறங்குவது அவ்வளவு எளிதான ஒரு செயலாக இருக்காது என்றும் கூறி தி. மு. கழகம் ஏடுகளின் மூலமாகவும், பொதுக் கூட்டங்களின் வாயிலாகவும், மாநாட்டுத் தீர்மானங்களின் மூலமாகவும் தன் கருத்தை வெளியிட்டு வந்துள்ளது. அரசாங்கம் நாடகச் சட்டத்தைக் கொண்டு தி. மு. கழகத்தின் மீது பாயாதிருக்கும் வரையில், தி. மு. கழகம் அந்தச் சட்டத்தைப்பற்றிக் கவலைகொள்ளத் தேவையில்லை. தி. மு. கழகத்தின் முழு ஆதரவையும், பொது மக்களின் கவர்ச்சியையும் பெற்றுப் பண்போடும், நன்னோக்கத்தோடும் தி. மு. கழகத்தால் நடத்தப்படும் நாடகம் தடை செய்யப்படுமேயானால், அது குறித்துச் சட்டப்படியான நடவடிக்கையையோ அல்லது கிளர்ச்சியையோ அல்லது இரண்டையுமோ துவக்க வேண்டிய பொறுப்பைப் பொதுச்செயலாளரிடம் பொதுக்குழு ஒப்படைத்தது மிகவும் போற்றுதற்குரிய செயலாகும். எனவே தி. மு. கழகத்தைச் சார்ந்த கண்ட கண்ட தோழர்கள், கண்ட கண்ட நாடகத்தைக் கண்ட கண்ட இடத்தில் நடிக்க முற்படாமல், அவர்கள் பொதுச்செயலாளரின் அனுமதி பெற்று நடத்துவதற்கான முறையைக் கையாளவேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறோம். இதனால் பல அவசியமற்ற தொல்லைகள் தவிர்க்கப்பட இயலும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிற்சங்கங்களை நிறுவும் முடிவான தீர்மானம் அடுத்துக் கூட இருக்கும் மாநில மாநாட்டில் திட்டவட்டமாக உருவாக்கப் பெறும். அதற்குள் ஆங்காங்குள்ள தி. மு. கழகத் தொழிலாளத் தோழர்கள் தனிச்சங்கம் அமைப்பதற்காக சூழ்நிலையையும், முன்னேற்பாடுகளையும் அமைதியான முறையில் உருவாக்கும் பணியில் ஈடுபடுவார்களாக! 'போட்டிச் சங்கம்' என்ற முறையில் அமைக்காமல்,

இரயில்வே கட்டண உயர்வு

குறைந்த தொலைவு இரயில்வே கட்டணத்தை உயர்த்தியும், நீண்ட தொலைவுக் கட்டணத்தைச் சிறிதளவு குறைத்தும் இரயில்வே வரவு-செலவு கணக்கை இந்திய இரயில்வே இலாகாவினர் வெளியிட்டுள்ளனர். இதனல் இரயில்வேக்கு இலாபமா அல்லது நட்டமா என்று கணக்கிட்டால், இலாபந்தான் கிடைக்கிறது. ஆண்டுக்காண்டு கட்டணங்களை உயர்த்தித் தன் இலாபக் கணக்கைக் கூட்டுவதில்தான் இந்தியப் பேரரசு கவலையுள்ளதாக இருக்கிறதே ஒழிய, கட்டணத்தைக் குறைத்து மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளான ஏழை எளியவர்க்கு நன்மை புரிய வேண்டும் என்ற அக்கரையில்லை. மூன்ரும் வகுப்பு வண்டிகளில் கூட்ட நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளைக் காணவில்லை; ஆனல் கட்டணம் மட்டும் உயர்கிறது.

குறைந்த தொலைவுக் கட்டண உயர்வு ஏராளமான ஏழைகளைத்தான் மிகவாகப் பாதிக்கும். நீண்ட தொலைவு பயணம் செய்பவர்கள் பெரும்பாலும் வசதியுள்ளவர்களாகத்தானிருப்பார்கள். அத்தகையோர்க்குச் சலுகையும் ஏழைகளுக்கு அதிகத் தொல்லையும் தருகிற மாதிரியில்தான் கட்டணவிதிப்பு அமை திருக்கிறது. கட்டணத்தை ஆண்டுக்காண்டு உயர்த்திக்கொண்டே போகாமல், கட்டணத்தைக் குறைப்பதற்கும், கூட்ட நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும் வழி காணுவதுதான் இந்தியப் பேரரசின் முக்கிய கடமையாகும். நீண்ட தொலைவு பிரயாணிகளுக்குச் சலுகை காட்டட்டும்; வரவேற்போம்: அதற்காகக் குறைந்த தொலைவு பிரயாணக்காரர்களுக்கு மிகக் கட்டணம் விதிக்கவேண்டாம் என்பதைத்தான் வற்புறுத்தவேண்டியிருக்கிறது.

ஃ ஃ ஃ

ஆண்டவனுக்கு ஒலிபெருக்கிக் காணிக்கை

காஞ்சி ஏகாம்பரநாதருக்குத், திருப்பனந்தாள் பண்டார சன்னதி அருள்நந்தித் தம்பி

கழகத் தோழர்களின் கருத்துக்கிசையத் தொழிற்சங்கப் பணிகளை ஈடேற்றுவதற்கான 'அமைப்பு' என்ற முறையில் தொழிற்சங்கம் அமைக்கத் தி. மு. கழகத் தோழர்கள் ஆங்காங்கு முயலுவார்களாக! தொழிற்சங்கங்கள் கட்சி அடிப்படையில் அமையாமல், பொதுவான அடிப்படையில் அமைந்து, எல்லாக்கட்சித்தொழிலாளர்களும் ஒரே அமைப்பின்கீழ்ப் பணியாற்றுதலைத்தான் தி. மு. கழகம் இதுகாறும் வற்புறுத்திவந்தது; ஆதரித்துவந்தது. ஆனல் கம்யூனிசுடு, சோசியலிசுட்டு, காங்கிரசு கட்சிகள் தனித்தனித் தொழிற்சங்கங்கள் அமைத்துக்கொண்டு பொதுவான தன்மைக்கு உடன்படாத காரணத்தால்தான், தி. மு. கழகம் தனித் தொழிற்சங்கம் காணவேண்டிய நிலைமைக்கு வந்துள்ளது. இந்த நிலை கழகம் விரும்பிய நிலையல்ல; ஆளாக்கப்பட்ட நிலையேயாகும். பல ஆண்டுக் காலம் பொறுத்துப் பார்த்ததற்குப் பிறகுதான் கழகம் இந்த முடிவை ஏற்க நேர்ந்திருக்கிறது. ஆங்காங்குள்ள கழகத் தொழிலாளத் தோழர்கள் அமைதியோடும், ஆர்வத்தோடும் தொழிற்சங்கங்களை நிறுவுவதற்கான பணிகளைத் தலைமைக் கழகத் தொடர்போடு புரிவார்களாக!

தி. மு. கழக மாநில மாநாட்டைத் திருச்சியில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டிருப்பது, எல்லாவகையில் பொருத்தமானவொரு முடிவாகும். தீர்மானத்தில் கண்டபடி ரூ. 25,000 முன்பணமாகச் சேர்ப்பதற்கு எல்லா மாவட்டக் கழகங்களும் ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறோம். பொதுச் செயலாளர் அறிக்கைவிடும் நாட்களில் சிற்றூர்க்கிளை, மாவட்டக்கிளை, பொதுக்குழு ஆகிய அமைப்புகளைப் புதிய தேர்தல்கள் மூலம் புதுப்பித்துக் கழகத்தை வலிவும் பொலிவும் மிக்கவொரு ஆற்றலாக மாற்றக் கழக உறுப்பினர்கள் எல்லோரும் பாடுபடுவார்களாக!

பேரூர் பொதுக்குழுக் கூட்ட முடிவுகள் வாழ்க! வெல்க!

ன் அவர்கள் ஒலிபெருக்கி ஒன்றைக் காணிக்கையாகச் செலுத்தியுள்ளார். இந்த ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி அதன் மூலம் இருமுறைத் தோத்திரப் பாடல்களை ஒலிபரப்ப வேண்டுமென்பது அவரது ஆவலாம். பழைய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட காளைமாட்டு வாகனத்தையும், புலித்தோலாடையையும், யானைத்தோல் போர்வையையும், பாம்பு அணி யையும் வில்—வாள்—வேல்—மழு முதலிய ஆயுதங்களையும், தீவட்டியையும் இன்னமும் விடாமல் பிடிவாதமாக அவற்றையே வைத் துக்கொண்டிருக்கும் 'ஏகாம்பரர்,' எப்படித் தான் அமெரிக்கர் செய்து அனுப்பும் ஒலி பெருக்கியை ஏற்பாரோ தெரியவில்லை! ஏற் பது முறையாகாதே! ஒலிபெருக்கியை ஏற் றுக்கொள்ள ஆண்டவனுக்கு இசைவுதான் என்றால், அவர் தீவட்டிக்குப் பதிலாக மின் சார விளக்கையும், காளைமாட்டு வாகனத்திற் குப் பதிலாக போர்டு காரையும், புலித்தோ லாடைக்குப் பதிலாக டியூட் சூட்டையும் ஏற் றுக்கொள்ளவேண்டுமே! இப்பொழுதுதான் சிறு சிறுக ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருக் கிருர், இன்னும் காலம் போகப்போக எல்லா வற்றையும் ஏற்றுக்கொண்டுவிடுவார் என் றால், வரவேற்க வேண்டியதுதான்!

ஃ ஃ ஃ

தமிழ் ஆட்சிமொழி

"தமிழ் ஆட்சிமொழி ஆவதை யாரும் தடுக்கமுடியாது" என்று அன்பர் ஆச்சாரி யாரும், "தமிழைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்கவேண்டும். ஆங்கிலம் இருந்த இடத்தில் தமிழ் இருக்கவேண்டும். பல்கலைக் கழகத்தார் இந்த முடிவுக்கு வராவிட்டால் அரசாங்கம் தலையிடவேண்டி வரும்" என்று நிதியமைச்சர் தோழர் சுப்பிரமணியம் அவர்க ளும் கூறியிருபது வியப்புக்குரியதாகும். இந்தக் குருவுக்கும் சீடருக்கும் எப்படி இந்த ஆர்வம் பிறந்தது என்று தெரியவில்லை! காலப்போக்கு அவர்களை அப்படிப் பேசவைத் திருக்கிறது என்றுதான் கொள்ளவேண்டி யிருக்கிறது. அவர்களது கூற்று நாணயமும், நேர்மையும் பொதிந்துள்ளதுதான் என்றால், அது போற்றப்படவேண்டியதுதான். அவர் கள் இருவரும் நடைமுறையில் தமக்கிருக்கும் அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றின் உதவி யுடன் அவர்களின் கூற்றுக்களை நடைமுறைக் குக் கொண்டுவர முனைவார்களா என்பது தான் ஐயப்பாடாக இருக்கிறது. கல்வி இலாகா வையும், ஆட்சிப் பொறுப்பையும் கையில் வைத்திருக்கிற தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் முயன்றால் தமிழைப் பயிற்சிமொழி யாகவும் ஆக்கலாம், ஆட்சிமொழியாகவும் ஆக்கலாம். அவர் முனைவாரா? அவற்றிற் கான அடிகோலுவாரா? அதற்கு ஆச்சாரி யார் ஒத்துழைப்பு தருவாரா?

அட்டைப்படம்

வழக்கு மன்றத்தில் கலிலியோ

கலிலியோ—1564-க்கும் 1642-க்கும் இடை யில் இத்தாலி நாட்டில் வாழ்ந்த அரும்பெரும் அறிவியல் அறிஞர். அவர் வானியல் அறிவில் வல்லவராகத் திகழ்ந்தார். அவர் உலகம் கதிரவனைச் சுற்றிவருகிறது என்ற உண் மையை உலகோர்க்கு முதன் முதலில் கூறிய உயரியவராவார். உலகம் இருந்த இடத்தி லேயே இருக்கிறது, கதிரவன்தான் உலகைச் சுற்றுகிறுன் என்ற கருத்தை மதவாதிகள் நம்பிப்பரப்பிவந்தனர். கலிலியோவின் கூற்று மதவாதிகளின் கூற்றுக்கு மாறுபாடாக இருக்கவே, மதக்குருக்கள்மார்கள் கலிலியோ வின்மீது சீறி விழுந்தனர்—அவருக்குச் சொல் லொணுக் கொடுமைகள் புரிந்தனர்—அவரை இருட்டறையில் அடைத்துவைத்தனர்—வய தேறி உடல் தளர்ந்தவர் என்றும் பாராமல் அவரை வாட்டி வதைத்தனர். அவர் கண் ணொளி இழந்து பலகாலம் சிறையில் கிடந் தார்.

இறுதியில் மதக்குருக்கள்மார்கள் அவரை வழக்கு மன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தி, அவர் மதக் கருத்துக்கு மாறுபாடான கருத் தைக் கூறிய குற்றத்திற்கு உள்ளாக்கி அவர் மீது குற்றஞ்சாட்டினர். அவர் தாம் குற்ற வாளியல்ல என்று மறுத்தார்; தாம் உண் மையையே சொல்லுவதாகக் கூறினர். புதிய கருத்தை விட்டுவிட்டு, மதக்கருத்தையே ஏற்றுக்கொண்டு, மதக்கருத்தை மாற்றிக் கூறியதற்காக வருந்தி மன்னிப்புக் கேட் கவேண்டும் என்று அவரை மதவாதிகள் வற்புறுத்தினர். அந்த வழக்கு மன்றத்தின் காட்சிதான் இவ்விதழின் அட்டைப்படமாக விளங்குகிறது.

மதவெறியர்களுக்கிடையில் தள்ளாடித் தள்ளாடி நின்றுகொண்டிருந்த கலிலியோ வால் வேறொன்றும் கூற வழியின்றி தம்மு டைய கூற்றுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். மன்னிப்புக் கேட்டுக்கொண்டு முடிந்தவுடன் அவர் வாய் முணுமுணுத்த தாம். அவர் உதடுகளினின்றும் மெல்லிய குரலில் "இருந்தாலும் உலகம் சுற்றத்தான் செய் கிறது" என்ற சொற்றொடர் வெளிப்பட்டதாம்.

இன்று மத வெறியர்களின் அந்த வீராப்பு வீழ்ந்துபட்டுவிட்டது; கலிலியோவின் முணு முணுப்பு பேருண்மையாகிவிட்டது!

வினாவும் விளக்கமும்

சேவல்—மீன்—புரு—கிளி ஆகியவைகளை அறுத்துச், சமைத்துக், காவடியாகக் கட்டித் தூக்கிக்கொண்டுபோய்ப், பழனியாண்டவன் சன்னதியில் காணிக்கையாக வைத்தால், அவை யாவும் உயிர்பெற்று எழுகின்றன என்றும், மணலைக் கட்டிக்கொண்டுபோய்க் காணிக்கையாக வைத்தால், அது சர்க்கரையாக மாறிவிடுகிறது என்றும் வைதீகர்கள் கூறுகிறார்களே அதுபற்றிய கருத்தென்ன ?

மதவாதிகள் தங்கள் மதக்கருத்துக்களிடம் மக்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும்—சொல்லப்படும் பித்தலாட்டங்களைச் சேர்ந்தவைதாம் மேற்கூறப்பட்டிருப்பவைகள்.

இப்படிப்பட்ட 'தெய்வீக'ச் செயல்கள் இப்பொழுது பழனியில் நடைபெறுகின்றனவா என்று கேட்டறிந்து பார்த்தால், அப்படி ஒன்றும் இந்தக்காலத்தில் நடைபெறவில்லை என்றும், அப்படிப்பட்ட பித்தலாட்டச் செயல்கள் நடைபெற்றுப் பல ஆண்டுகள் ஆயின என்றும் பழனி மக்கள் கூறுகிறார்கள். மேற்கண்டது போன்ற கேள்விகளைக் கேட்போர், அவர்கள் சுட்டிக்காட்டும் 'அதிசயங்கள்' இப்பொழுது இல்லை என்பதை முதற்கண் உணரவேண்டும். இப்பொழுது அப்படிப்பட்ட 'அதிசயங்களைச்' செய்துகாட்டவேண்டிய இன்றியமையாமை இல்லை, நாட்டு மக்கள் அத்தனைப் பேரும் பழனி ஆண்டவனின் 'தெய்வீகச்சக்தி'யை நன்குஉணர்ந்துகொண்டு விட்டார்கள் எங்கணும் என்றோ, அல்லது பழனி ஆண்டவன் பக்தகோடிகளைப்பார்த்து, "உமது பக்தியை மெச்சினோம்; இனி மச்சக் காவடியோ அல்லது கோழிக்காவடியோ எமக்குத் தேவையில்லை" என்று கூறிவிட்டான், ஆகவேதான் அத்தகைய காவடிகள் இப்பொழுது எடுக்கவேண்டாம் என்று வைதீகர்கள் முடிவுசெய்துவிட்டார்கள் என்றோ கூறுவதற்கு ஏதொரு சான்றும் இல்லை. பின் ஏன் அத்தகைய மாமிசக் காவடிகள் எடுப்பது இப்பொழுது நின்றுவிட்டது என்றால், அந்த 'அதிசயங்களின்' உள்பொதிந்துகிடக்கும் பித்தலாட்டங்களைப் பொதுமக்களில் பகுத்தறிவுபடைத்தோர் நன்கு உணர்ந்துகொண் விட்டார்கள் என்பதே உண்மைக் கார மாகும்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 'நடந்ததாக'ச் சொல்லப்படும் 'அதிசய களின்' தன்மைகள் யாவை என்று, அத் கைய 'அதிசயங்களை' நடத்திக்காட்டிய ஒ சிலரை நெருங்கி, அவற்றின் உள்ளடங் கிடக்கும் 'உண்மைகள்'தாம் என்ன என் உசாவினால், கையாண்ட பித்தலாட்டங்க தெள்ளத் தெளிய எடுத்துக் கூறுகிறார்கள்.

சேவல்—மீன்—புரு—கிளி ஆகியவற்றி மாமிசக் காவடிகளைத் தூக்கிக்கொண்டு வ வோர், அக்காவடிகளைப் பழனி மலையிலுள் மண்டபம் ஒன்றில் வைப்பார்கள் என்று பிறகு அந்தக் காவடிகளை 'ஆண்டவன்' அ கில் கொண்டு செல்வதற்கான அனும இரண்டு மூன்று நாட்கள் கழித்துதா கொடுக்கப்படும் என்றும், அதற்கிடையி காவடிக்குரியோரும் கோயில் குருக்கள்களு கூடிக்கலந்து பேசிக்கொண்டு வேறு சேவல்—மீன்—புரு—கிளி ஆகியவற்றை இரவோடு இ வாகக்கொண்டுவந்து மாமிசத்திற்குப் பதிலா யாருக்கும் தெரியாமல் வைத்துவிடுவார்க என்றும், பிறகு காலையில் தூக்கிக்கொண் 'ஆண்டவன்' சன்னதி நோக்கி நடப்பார்க என்றும், சன்னதியில் காவடிச் சட்டிகளி மீது மூடியிருக்கும் துணிகளை அகற்றுவா கள் என்றும், அப்பொழுது சேவலும்—மீனு—புருவும்—கிளியும் உயிர்பெற்றெழுந்தனவ கக் காட்டப்படும் என்றும், அதனைக் கண் அறிவில்லா 'பக்தகோடிகள்' பரவசமடைவா கள் என்றும் உண்மையறிந்தவர்கள் கூறு றார்கள். அறுத்துச் சமைத்துக் கொண் வரப்பட்ட சேவலும் பிறவும், பழனி ஆண் வன் சன்னதியில் உயிர்பெற்று எழுகின்ற என்பது வெறும் வடிகட்டின கற்பனையா பித்தலாட்டமாகும்.

இறந்துபோன சேவலை, அதுவும் கறியாக சமையல் செய்யப்பட்ட சேவலை உயிர்ப்பிக்கு ஆற்றல் படைத்தவன்தான் பழனி ஆண் வன் என்றால், பழனி மாநகரில் இறந்துபே

ற எவ்வளவோ நல்ல மக்களைப், பழனி ண்டவன் சன்னதியில் கொண்டுபோய்ப் ட்டு, அவர்கள் எல்லோரையும் பிழைக்க க்கலாமே! பழனி நகர் மட்டிலுமல்லாமல், ழகத்திலுள்ள நல்லவர்களை, ஏன், இந்தி துணைக்கண்டம் முழுவதிலுமுள்ள நல்ல களை, ஏன், அகில உலகம் முழுவதிலு ள்ள நல்லவர்களை அவர்கள் இறந்துபடும் து, அவர்களது பிணங்களை கொண்டு துவைத்து உயிர் பிழைக்கவைக்கலாமே! தாரண மனிதர்களை விட்டுவிட்டாலும், ண்டவனோடு அதிகத் தொடர்பு கொண் ப்பதாகக் கருதப்படும் மகான்கள்—முனி கள்—பண்டாரங்கள்—சங்கராச்சாரியார்கள் டத்துத்தலைவர்கள்-கோயில் குருக்கள்கள் ற்றில் தவறி விழுந்து இறந்த சிருங்கேரி த்துத் தலைவர் — புத்துநோய் கண்டு ண்ட ரமணரிஷி—நோய்வாய்ப்பட்டு இறந்த விந்தர்—குண்டடி பட்டு மறைந்த காந் ர் ஆகியோரது பிணங்களையாவது உட யாகக் கொண்டுவந்து வைத்துப், பழனி ண்டவன் 'மகிமை'யால் அவர்கள் எல்லோ யும் உயிர் பிழைத்தெழச் செய்திருக்க மே! கறியாய்ப்போன சேவலை உயிர் ழைத்தெழச் செய்யமுடியுமேயானால், இறந்த தர்களை எழுப்புவது எவ்வளவோ எளி ற்றே! இந்த எளிதான செயலைச் செய்ய னி ஆண்டவன் ஏனோ முன்வரவில்லை? றவர்களை எழுப்ப அவருக்கு மனமில்லா டாலும், அவரை அடிக்கடி வழிபட்டு, வரது கோயிலைச் சுற்றி வலம் வருவதுமட்டு லாமல், அவரது கோயில் எழும்பியிருக்கும் யையே சுற்றி வலம்வரும் பழக்கத்தைக் ண்டிருந்த, பழனி ஆண்டவனின் பக்த டியான சங்கரண்டாம்பாளையம் பட்டக் ர், சித்திரவதைச் செய்யப்பட்டு மலையடி ரத்தில் பிணமாகக் கிடந்தபோதாவது வரை உயிர்பெற்றெழச் செய்திருக்கலாமே. தனைச் செய்ய ஏன் அந்த ஆண்டவன் முன் வில்லை?

இறந்த மனிதனைப் பிழைக்க வைக்க முடி து, ஆனால் இறந்த சேவலையும்—மீனையும் வையும்—கிளியையும் மட்டுமேதான் பழனி ண்டவனால் பிழைக்கவைக்க முடியும் என் அவன் சேவலுக்கும் மீனுக்கும் பிற ர்களுக்கும் வேண்டுமானால் ஆண்டவனாகவ க்கமுடியுமேயொழிய அவனை மனிதனுக் ய ஆண்டவனாகக் கொள்வதற்கில்லை! ன்மை நிலையை ஆராய்ந்து பார்க்கும்போது; வன் சேவலுக்கும் பிறவற்றிற்குமாவது ண்டவனாக இருக்கிறானா என்றால், அதுவும் லை என்பதுதான் தெள்ளத்தெளிய பெறப் கிறது.

செத்த சேவலை பழனி ஆண்டவன் 'மகிமை'யால் உயிர்பெற்றெழச் செய்யமுடியும் என்பதிலே வைதீகர்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருக்குமேயானால், அதனை நிலை நாட்டிக் காட்டமுடியும் என்று அவர்கள் அறைகூவல் விடுவார்களேயானால், நாமே சேவலைக் கறியாகச் சமைத்துப் பழனிமலைக்கு எடுத்துவரத் தயாராக இருக்கிறோம்; அந்தக் கறி நமது கண்காணிப்பின்பேரில் ஆண்டவன் சன்னதியில் வைக்கப்படும்; வைதீகர்கள் நம் எதிரில் ஆண்டவன் சன்னதியில் நின்று பழனி ஆண்டவனை வேண்டிக்கொள்ளட்டும்; பிறகு பார்ப்போம் சேவல்கறி கறியாகவே இருக்கிறதா அல்லது சேவலாக மாறுகிறதா என்று? இதனைச் செய்ய பழனி ஆண்டவன்—மகிமைக்குப் பரிந்து பேசும் வைதீகர்கள் யாரேனும் தயாராக இருக்கிறார்களா? எவருக்கும் அந்தத் துணிவு இருப்பதாக இதுவரையில் தெரியவில்லை!

அதுபோலவே மண்ணைச் சர்க்கரையாக ஆக்கிக்காட்டும் வல்லமை பழனி ஆண்டவனுக்கு உண்டு என்பதைக் காட்ட வைதீகர்கள் தயார்தான் என்றால், நாம் மண்ணைச் சுமந்துகொண்டுவந்து பழனி ஆண்டவன் சன்னதியில் நிற்கத் தயாராக இருக்கலாம்! வைதீகர்களுக்கு அந்த அளவுக்குப் பழனி ஆண்டவன் 'மகிமை'யிலே நம்பிக்கையும், அதனை நிலைநாட்டிக் காட்டும் துணிவும் உண்டா? இதுவரையில் பிறந்ததில்லை!

பழனி ஆண்டவன் சன்னதியில் மண் சர்க்கரையாக மாறுவதற்கான வழி இருக்கிறது என்றால், பின்னர் இந்த நாடு சர்க்கரைக்குத் தவியாக தவிக்கவேண்டியதில்லையே! ஆயிரக் கணக்கானவர்களின் உழைப்பை உறுஞ்சும் சர்க்கரை ஆலைகளை நெல்லிக்குப்பம், புகலூர், பாண்டியராசபுரம் போன்ற இடங்களில் கொண்டிருக்கவேண்டிய இன்றியமையாமை இல்லையே! காவிரி, கொள்ளிடம் போன்ற ஆறுகளிலிருந்து ஆற்றுமணலைக் கூட்சு வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய்ப் பழனி ஆண்டவன் சன்னதியில் கொட்டக் கொட்ட, அது சர்க்கரையாக மாறமாற, அதனை எடுத்து இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் மட்டுமல்லாமல், அகில உலகத்திற்கும் அனுப்பி இந்த நாட்டின் வருவாயைக் கோடிக்கணக்கான மடங்கு மிகவாகச் செய்யலாமே! இவைகளையெல்லாம் நடைமுறையில் காணமுடியாது, என்பதிலிருந்தே, இப்படிப்பட்ட 'அதிசயச் செய்தி'களிலுள்ள பித்தலாட்டத்தை நல்லறிவுபடைத்தோர் நன்கு உணர்ந்துகொள்ளலாம்!

மக்கட் பெருக்கம்

(2)

['டாக்டர்']

குடும்பக் கட்டுத்திட்டத்தை மக்கள் உணர்தல்

இந்தியத் துணைக்கண்டத்தில் மக்கட் தொகை எப்படிக் கட்டுக்கு மீறிப் பெருகிக் கொண்டுபோகிறது என்பதைப் பற்றியும், அப்படிப் பெருகுவதனால் மக்களின் வாழ்க்கை வளங்கள் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என் பதைப் பற்றியும், இப்பொழுதுள்ள நிலையில் கிடைக்கக்கூடிய உணவு—உடை—உறையுள்—வேலை—தொழில்—பிறவசதிகள் போன்ற வளங்களைப் போதுமான அளவுக்குப் பயன் படுத்த மக்கட்பெருக்கம் எவ்வாறு குறைக்கப் படவேண்டிய நிலையிலிருக்கிறது என்பதைப் பற்றியும், இந்த நிலையை உண்டாக்கக் குடும் பக் கட்டுத்திட்டம் (Family Planning) எப்படி இன்றியமையாததாக ஆகிறது என பதைப் பற்றியும், இந்தத் துறையில் அரசிய லார் எடுத்துள்ள முயற்சிகள் பற்றியும் முன்பு கண்டோம்.

இப்பொழுது, நம் நாட்டில், மக்கட் பெருக் கத்தால் ஏற்படும் அவதிகளைப்பற்றிப் பலரும் ஓரளவுக்கு உணரத்தலைப்பட்டுவிட்டனர் என் றுதான் கூறவேண்டும். மக்கள் தாங்களாகவே அவதிகளை உணரத் தலைப்படாவிட்டாலும், அவதிகள் அவர்களை உணரவைக்கத் தொடங் கிவிட்டன. நாட்டில் நலம் பயக்கும் நல்ல பொருளியல் செழிப்பும், நிலையான எதிர்கால நல்வாழ்வும் நிலவவேண்டுமானால், இயற்கை வளங்களுக்கு ஏற்ப மக்கட் தொகையின் அளவு இருக்கவேண்டியிருக்கிறது என்பதை யும், வளமான நிலத்திற்கு ஏற்பதான் வள மான மக்களின் வாழ்வு அமைகிறது என்ப தையும், நாட்டின் பொருளுற்பத்திக்கு ஏற்ப தான் பிள்ளைகளின் உற்பத்தி இருக்கவேண்டி யிருக்கிறது என்பதையும் சிறுகச் சிறுக நாட் டவர்கள் உணரத் தலைப்பட்டிருப்பது; நல்ல எதிர்காலத்தைக் காட்டுவதற்கான அறிகுறி யாகும். இந்தியாவில், மக்கள், குடும்பக் கட் டுத்திட்டக் கருத்தை ஏற்றுக்கொள்ள இசை கிறார்களா, இல்லையா என்பது இப்பொழு பிரச்சினையாக இல்லை; மிகப் பிற்போக்கான நிலையிலுள்ள மக்களும் எளிதாகப் புரிந் கொண்டு எளிதாகக் கடைப்பிடிக்கக்கூடி கருத்தடை முறை என்ன என்பதுதான் பிர சினையாக இருக்கிறது. மேலும் மேலு பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டிருக்க வே டாம் என்ற உணர்வும், விருப்பமும் பெரும் லான பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன ஆனால் அவர்களில் பலரும் அதற்கான வ வகைகளைக் காணமாட்டாமல் தவிக்கிறார்க

குடும்பக் கட்டுத்திட்டம் என்றால் என்ன?

குடும்பக் கட்டுத்திட்டத்தைப் பற்றி ஆராய்ச்சியில் இறங்குமுன், குடும்பக் கட்டு திட்டம் என்றால் என்ன என்பதைப்பற் நம்மில் ஒவ்வொருவரும் தெளிவாக அறிந் கொள்ளவேண்டும். குடும்பக் கட்டுத்திட் என்றால், பிள்ளைப்பேறு, பெருஞ்சுமையாகவு —தொல்லையாகவும்—கேடாகவும்— அமைய மல் நாட்டின் நலனையும் தனிப்பட்ட குடும் நலனையும் பாதிக்காத வகையில், போதுமா அளவில், இருக்கும்படி அதனைக் கட்டுப்படு திக்கொள்ளும் முறையாகும். கட்டுப்படுத்த என்பதில், அளவுக்குமீறி பிள்ளை பெறுவோ பிள்ளை பெறுதலை அளவோடு நிறுத்தி கொள்ளும்படி செய்தலும், பிள்ளை பெறாதோ போதுமான அளவு பிள்ளைகளைப் பெற்று கொள்ளும்படி செய்தலும் அடங்கும். அ வது போதுமான அளவு பிள்ளைகளைப் பெ றுக்கொண்டோர் கருத்தடை முறையை கற்றுக்கொள்ளும்படி செய்தலும், பிள்ளைய றோர் பிள்ளை பெறாததற்கான காரணங்க அறிவியல் முறையில் கண்டுபிடித்து, அவ ளுக்கான மருத்துவ வசதிகளைச் செய்தலு குடும்பக் கட்டுத்திட்டத்தின்பாற்படுவனவ கும். எனவே கருத்தடைக்கான வழிவகைகளை கூறுதலும், கருத்தரிப்பதற்கான வழி வ களைக் கூறுதலும் குடும்பக் கட்டுத்திட்

இயக்கத்தின் கொள்கைகளாகும் எனச் சுருங்கக் கூறலாம்.

நாட்டில் நிலவும் பழக்க வழக்கங்கள்

குடும்பக் கட்டுத்திட்டக் கொள்கைகளை அறிவியல் அடைப்படையில் ஆராய்ந்தறிந்து வழிவகைகளைக் காணமுடியாத அறியாமை நிரம்பிய மக்கள், நமது நாட்டில், குருட்டு நம்பிக்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு பலன்காணாது கிடந்து உழல்கின்றனர். கருத்தரிப்பதற்கும் கருக்கலைப்பதற்கும் அத்தகையோர் மேற்கொள்ளும் பழக்கங்களும் முறைகளும் வியப்புக்குரியவை— வேடிக்கையானவை — விரும்பத்தகாதவை— விபரீதம் பயப்பவை ஆகும்!

பிள்ளையில்லாத கணவனும் மனைவியும், தங்களுக்குப் பிள்ளையில்லாததற்குக் காரணம் இருவரின் அல்லது ஒருவரின் உடற்குறைபாடா—உடற்கோளாறு என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள முற்படாமல், வேறு ஏதேதோ குருட்டு நம்பிக்கையின்பாற்பட்ட பழக்க வழக்கங்களை மேற்கொள்கின்றனர்.

பெண்கள் அரசமரத்தை நூற்றெட்டு தடவையோ அல்லது ஆயிரத்தெட்டு தடவையோ நாள்தோறும் சுற்றிவந்தால், அவர்களுக்குப் பிள்ளையுண்டாகிவிடும் என்று கருதிக்கொள்கின்றனர்.

விடியற்காலையில் ஆற்றிலோ குளத்திலோ மூழ்கி எழுந்து பசுக்களுக்கு அருகம்புல்லைப் பிடுங்கிப்போட்டால் கருத்தரிக்கும் என்று எண்ணிக்கொள்கின்றனர்.

சிலர் அரசமரத்துக்கும்—வேப்பமரத்துக்கும் திருமணம் செய்துவைக்கின்றனர்.

சிலர் இறைவனுக்கும் — இறைவிக்கும் கோயில்களில் திருக்கல்யாணம் செய்துவைக்கின்றனர்.

கோயில் கட்டிக், குளம் வெட்டிக், கும்பாபிஷேகம் நடத்தி, அபிஷே ஆராதனைகள் செய்து, வந்தனை வழிபாடுகள் நடத்திப், படையல்போட்டுக், காணிக்கை செலுத்தித், தூப தீப் நைவேத்தியங் காட்டிப், பலிகளிட்டுக், காவடிகள் தூக்கி, மொட்டை அடித்து, வேண்டுதலைகளைச் செய்து; யாகம் நடத்தித், தோஷம் கழித்து, விரதங்கள் மேற்கொண்டு, தலயாத்திரை போய்ப், புண்ணியத் தீர்த்தங்கள் ஆடித், தான தருமங்கள் செய்து; மந்திரங்கள் செபித்து, நெய் விளக்குகள் ஏற்றி, மண்ணால்—செப்பால்—வெள்ளியால்—தங்கத்தால் பிள்ளைகள் செய்து வைத்துக், கும்பிடுதண்டம் போட்டு, அங்கப் பிரதஷ்டினம் செய்து இன்னும் என்ன என்னவெல்லாமோ செய்து கருத்தரிப்பதற்கு வழிபிறக்குமா என்று எதிர்பார்க்கின்றனர்.

சில இடங்களில் கோயில்களிலுள்ள பசுமாடுகளின் சிறுநீரைக் குடித்தால் பிள்ளை பிறக்கும் என்று கருதிக்கொள்கின்றனர்.

சில குறிப்பிட்ட கோயில் பூசாரிகள், சாமியார்கள் மென்று துப்புகின்ற வாழைப்பழத்தைக் கையேந்தி உண்டால் கருத்தரிக்கும் என்று எண்ணிக்கொள்கின்றனர்.

பிள்ளைப்பூச்சியைக் கொன்று அதனைச் சோற்றோடு கலந்து உண்டால், பிள்ளை உண்டாகும் என்று கருதிச் சில பெண்கள் அவ்வாறு செய்கின்றனர்.

பண்டைக்காலத்தில் வடநாட்டிலிருந்த அரசர்களும், பிரபுக்களும் புத்திரகாமேஷ்டி யாகங்கள் செய்துபார்த்தனர்.

மந்தரம் செய்யப்பட்ட தண்ணீரைச் சிலர் குடித்துப் பார்க்கின்றனர்.

இவ்வாறான பழக்கங்களிலும், இவை போன்ற வேறு பல பழக்கங்களிலும் ஈடுபட்டுக் கருத்தரிப்பதற்கு வழி பிறக்காதா என்று ஏங்கிக்கிடக்கின்றனர் பலர். கணவன் மனைவி ஆகிய இருவரில், ஒருவருக்கோ அல்லது இருவருக்குமோ பிள்ளை தோன்றமுடியாத அளவுக்கு உடற்குறைபாடோ அல்லது உடற் கோளாறோ இருக்குமேயானல், அவர்கள் மருத்துவமுறையில் அந்தக் குறைபாட்டையும் கோளாறையும் நீக்கிக் கொண்டாலொழிய, அவர்கள் எத்தனை ஆயிரம் வேண்டுதலைகளை வேண்டிக்கொண்டாலும் அவற்ருல் ஏதொன்றும் ஆகிவிடாது.

பிள்ளை பெற்றெடுப்பதற்கான உடல்வளக் கூறுபாடு அமையப்பெருத ஆடவர்கள், தங்களுடைய உடல் வளம், பிள்ளை பெற்றெடுப்பதற்குத் தகுதியுடையதல்ல என்பதை அறிந்துகொள்ளாமல், அடுத்தடுத்துப் பல பெண்களைத் திருமணம் செய்துகொள்ள முற்படுகின்றனர். 'புத்' என்ற நரகத்திற்குத் தாங்கள் போகாமல் இருக்கவேண்டுமே என்ற குருட்டு நம்பிக்கையின் காரணமாய் ஏற்பட்ட அச்சத்தால், அத்தகைய ஆடவர்கள், தாம் சாகும் காலமாகிய எண்பது, தொண்ணூறு வயது வரையிலுங்கூடத் திருமணம் செய்து கொள்கின்றனர். அப்படிப்பட்ட ஆடவர்கள் இறந்தபிறகு பலர் விதவைகளாகக் காட்சி

யளிக்கிருர்கள் என்பதைத் தவிர, அந்தத் தொண்டு கிழவனுக்குப் பிள்ளை ஏதும் பிறப்பதாகத் தெரியவில்லை.

மேற் கூறப்பட்ட குருட்டு நம்பிக்கைகளாலும், மூடப்பழக்க வழக்கங்களாலும் மக்களின் நேரமும்நினைப்பும், அறிவும் ஆற்றலும், உழைப்பும் உடைமையும் பாழாகின்றனவே அல்லாமல், உருவான பலன்களைக் காண முடிவதில்லை. எனவேதான், அறிவியல் அடிப்படையில், பிள்ளையில்லாத கணவனும மனைவியும் மருத்துவத்தேர்வு (வைத்திய பரீட்சை) செய்துகொண்டால், தங்கள் உடற் குறைபாட்டையும்—கோளாறையும் போக்கிக் கொண்டு, பிள்ளை பெறுவதற்குத் தங்களைத் தகுதியுடையவர்களாக்கிக்கொள்ள முயலலாம் என்பது, வற்புறுத்திக் கூறவேண்டிய அறிவுரையாக இருந்துவருகிறது.

பிள்ளையில்லாதோர் எப்படிச் சில மூடப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டொழுகுகிருர்களோ, அப்படியே மிகவான பிள்ளைகளைப் பெற்றெடுப்பவர்கள் அதாவது பிள்ளைகள் வேண்டாம் என்பவர்கள் சிலபல முறையல்லாத வேண்டத்தகாத பழக்கங்களை மேற்கொள்கின்றனர். அத்தகையோர் கரு உண்டாகாமற் செய்துகொள்வதற்கான வழிவகைகளை அறிவியல் அடிப்படையில் கடைப்பிடிக்க அறிந்துகொள்ளாத காரணத்தால், வேண்டத்தகாத பழக்கங்களை மேற்கொண்டு இடர்ப்படுகின்றனர்.

வறுமையால் காப்பாற்ற முடியாத காரணத்தாலோ, உடல் நலக் குறைவு ஏற்படுகிறது என்ற காரணத்தாலோ, அடுத்தடுத்துப் பெற்று வளர்க்கமுடியாத காரணத்தாலோ, குடும்பம் தாங்காது என்ற காரணத்தாலோ, இனிப் பிள்ளை வேண்டாம் என்று எண்ணும் காரணத்தாலோ தாய்மார்களில் பலர் கருச் சிதைவு செய்ய முனைகின்றனர். கருத் தரிப்பதற்கு முன்னரே அதைத் தடுக்க வேண்டிய முறைகளைக் கையாளத்தெரியாத அவர்கள், கருத் தரித்தபின்னர், பிள்ளைகளைக் கருவில் சிதைக்க முயலுகின்றனர். இதனுல் ஏற்படும் கேடுகள் பலப்பல.

கருச்சிதைவு செய்விக்கப் பெரும்பாலும் பயிற்சியில்லாத நாட்டு மருந்துவச்சிகளின் உதவியை நாடுவதால், கருவில் உள்ள பிள்ளைக்கு அழிவு தேடுமுன்னர், தாயே அழிந்து பட நேரிடுகிறது. கருவில் சிதைவு செய்வதால், ஏதோவொரு தசைப்பிண்டம் சிதைவு படுவதாக எண்ணிக்கொள்கின்றனர் பலர்; அவர்கள் அறியவேண்டும், தாங்கள், உயிரோடுள்ள ஆனுல் இன்னமும் பிறக்காத ஒரு குழந்தையை உள்ளபடியே கொல்கிருேம் என்பதை. அடிக்கடி இந்த முறையைக் கையாளும் பெண்கள் மிக்க உடல்நலிவு பெறுவதோடு, பல்வேறுவகையான நோய்களுக்கும் தங்களை ஆளாக்கிக்கொள்கிருர்கள். இதனுலேயே மீண்டும் பிள்ளைபெற வழியில்லாத மலடுகளுமாகிருர்கள் பலர்.

வேறு சிலர், திருமணம் ஆன சில காலத்திற்குள் குழந்தை வேண்டாம் என்ற கருத்தில் கருவைச் சிதைக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பல நச்சு மருந்துகளை உட்கொண்டும், கருப்பைக்குள் செலுத்தியும், தம்முடைய உடலைப் பெரிதும் வருத்திக் கொண்டு கருவைச்சிதைப்பதால் அவர்களது உடல் மிகமிக நலிவுறுகிறது. அவர்கள் உணர வேண்டியது என்னவென்ருல், சிறு வயதிலேயே தேவையான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளுதல் நலம்: வயது ஏற ஏற இருதயம் பற்றிய நோய்களும், இன்னும் பல நோய்களும் அவர்களுக்கு வர வாய்ப்பிருப்பதால், வயதான பின் பிள்ளைப்பேறு கேடு நிறைந்த ஒன்ருகும் என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

கருவில் சிதைக்க வசதி ஏற்படாத சிலர், குழந்தை பிறந்த பின்னர், அந்தப் பச்சிளங் குழந்தையைப் பதைக்கப் பதைக்கக் கொன்று விடவும் துணிவுகொள்கின்றனர். இது மிகவும் கொடுமை வாய்ந்த குடும்பக் கட்டுத்திட்ட முறையாகும். கள்ளக் காதலின் காரணமாகப் பிள்ளைப்பேறு உண்டானவர்கள், இத்தகையக் கொடுமையைச் செய்ய ஒருசிறிதும் தயங்குவதில்லை.

சிற்றூர்களில் சிலர் கைப்பிள்ளைக்கு நீண்ட நாள் தாய்ப்பால் கொடுத்தால், பிள்ளைப்பேறு உண்டாகாது என்று எண்ணி, குழந்தைக்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வரையிலும் தாய்ப்பால் கொடுக்கின்றனர். கருத் தடைக்கும் தாய்ப்பால் கொடுப்பதற்கும் எவ்விதத் தொடர்பு மில்லை என்பதை இத்தகையோர் உணர்வதில்லை. கருத்தடை முறையில் அறியாமையும் கொடுமையுந்தாம் நிரம்பிக் கிடக்கின்றன.

நல்வாழ்க்கைக்கு ஆன குடும்பக் கட்டுத்திட்டம்

நமது நாட்டில் செம்மையான கருத்தடை இயக்கம் ஒன்றிருந்தால் தாய்ச்சாவுகளும், குழந்தைச் சாவுகளும் மிகவாக ஏற்பட வழி

(31-ம் பக்கம் பார்க்க)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கமலநாதன் இந்தக் கேள்வியை ஏன் கேட்டான் என்று தங்கத்திற்குப் புரியவில்லை. சகுந்தலா தவறி விழுந்துவிட்டாள் என்பதை நிரூபிக்கத்தான் குலசேகரனின் கேள்விகள் இருந்தன. அதே போன்ற, எதிரிக்குச் சாதகமான கேள்வியை கமலநாதன் கேட்டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"உலாவ வருகிறவர்கள் எப்பொழுது வருவது வழக்கம்!"

"ரொம்பபேர் சாயங்காலந்தான், சிலபேர்—ஒன்று இரண்டு காலையில் வருவாங்க, கைத்தடியை சுழற்றிக்கிட்டு."

"நீ இந்தப் பெண்ணைப் பார்த்தபொழுது, மணி என்ன இருக்கும்?"

"உச்சிப்பொழுது ஆச்சுதுங்க!"

"வெய்யில் கடுமையாக இருந்துதா?"

"அக்னி நட்சத்திரங்க, தலை வெடிக்கிற வெய்யில்."

"கடற்கரை மணல் எப்படி இருந்தது?"

"கால் அடிவைச்சா கொப்பளிக்கிற மாதிரி இருந்துச்சுங்க."

"அப்படிக் கால் கொப்பளிக்கிற மணலில் யாராவது உலவ வருவதுண்டா?"

"யாருங்க வருவாங்க?"

"சரி!"

கமலநாதன் உட்கார்ந்தான். கோர்ட் அத்துடன் கலைந்தது.

* * *

முதல் நாள் வழக்கு முடிந்ததும், தங்கம் சகுந்தலாவை அழைத்துக்கொண்டு டாக்டர் சஞ்சீவியின் வீட்டுக்குப் போனாள். கமலநாதன் அரசாங்கத்துச் சார்பில் குற்றஞ்சாட்டும் வழக்கறிஞராக இருப்பதால், சகுந்தலாவைத் தன் வீட்டில் வைத்துக்கொள்வது நல்லதல்லவென்று அவளுக்குப் பட்டது. டாக்டர் சஞ்சீவி வீட்டில், அவரையும் அவருடைய மனைவி கற்பகத்தையும் தவிர வேறு யாரும் கிடையாது.

கோர்ட்டில் வழக்கு நடக்கும்போது, சகுந்தலா பேசாமல் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குத் தன்னைப்பற்றிய குற்றச்சாட்டில் வழக்கு நடப்பதாகவேத் தோன்றவில்லை. வேறு யாரோ ஒரு பெண்ணைப்பற்றி வழக்கு நடந்தால் பார்த்துக்கொண்டிருப்பதுபோல் அவள் உட்கார்ந்திருந்தாள். சாட்சிகள் ஒவ்வொருவரும் அவளை அடையாளம் காட்டும்பொழுது, அதற்குமுன் அவர்களில் யாரையும் தான் பார்த்ததாக அவளுக்கு ஞாபகம் இல்லை.

சகுந்தலாவை டாக்டர் சஞ்சீவி வீட்டில் விட்டதும் தங்கம் தன் வீட்டுக்கு வந்தாள். கமலநாதன் அப்பொழுதுதான் கோட்டைக் கழற்றி மாட்டிவிட்டு உட்கார்ந்தான்.

"என்ன, கேள்விமேல் கேள்வி போட்டபடியே இருக்கிறீர்கள்?" என்று தங்கம் கேட்டாள்.

"இன்றைக்குக் கேட்டது மிகக் குறைவு; எப்பொழுதும் இன்னும் அதிகமாக இருக்கும். சாட்சிகளில் கேள்வி - பதில் இவைகளில்தானே வழக்கை உருவாக்கமுடியும்?"

"சகுந்தலாவைத் தண்டித்துவிடுவார்களா, என்ன?"

"குற்றம் செய்திருப்பதாக நிரூபிக்கப்பட்

டால்; தண்டிப்பார்கள். இல்லையானால் விடுவித்துவிடுவார்கள்."

"அதெல்லாம் தெரியும். இந்த வழக்கில் என்ன ஆகும்?"

"இப்பொழுது சொல்லமுடியாது, தங்கம்!"

"உங்களால் ஒன்றும் செய்யமுடியாதா?" மெதுவாகத் தங்கம் கேட்டாள்.

மற்றவர்கள் யாராவது கேட்டிருந்தால் கமலநாதனுக்குக் கடுமையான கோபம் வந்திருக்கும். ஆனால் தங்கம் கேட்டது, களங்கமற்ற தன்மையில், நிர்வாக அமைப்புத் தெரியாததால். "குற்றஞ் சாட்டும்பொழுது, எனக்குத் தரப்பட்ட பொறுப்பை நான் நிறைவேற்றுகிறேன். ஆனால் அதே சமயத்தில் பொய்யானதை உண்மையென்று வாதிடவோ, உண்மையான ஒன்றை மறைத்திடவோ நான் விரும்பவில்லை. சகுந்தலா மட்டும் அல்ல, நீயே வந்து குற்றவாளிக்கூண்டில் நின்றாலும், நான் இப்பொழுது கேட்கும் அதே கேள்விகளைக் கேட்பேன். குற்றம் என்று நிரூபிக்கப்பட்டால், தண்டனை தரும்படிக் கூறத் தயங்கமாட்டேன்."

தங்கம் மேற்கொண்டு கமலநாதனிடம் ஏதும் பேசவில்லை. கமலநாதன் கூறியது, இரக்கமற்ற கடுமையாக அவளுக்குப் பட்டது.

* * *

வழக்கு மறுநாள் வந்தபொழுது டாக்டர் முத்துசாமி விசாரிக்கப்பட்டார். முதலில் கமலநாதன் கேள்விகள் கேட்டான்.

"நீங்கள்தானே மூர்ச்சையுற்றிருந்த எதிரியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டபொழுது, கவனித்தது?"

"ஆமாம்!"

"அன்று கொண்டுவரப்பட்ட அதே பெண்தான், இந்தக் குற்றவாளிக் கூண்டில் இருப்பதாக உறுதியாகக் கூறமுடியுமா?"

"கூறமுடியும்!"

"இந்தக் குறிப்புப் புத்தகத்தில் நோயாளியின் தன்மை பற்றியும், தரப்பட்ட சிகிச்சை பற்றியும் எழுதப்பட்டுக், கையெழுத்திடப்பட்டிருப்பது தங்களால்தானே!"

"ஆமாம்!"

"குறிப்புப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள அங்க அடையாளங்களும், கைரேகையும் இந்தப் பெண்ணுடையதுதானே?"

"ஆமாம்!"

"கொண்டுவரப்பட்டபொழுது பெண் எந்த நிலைமையில் இருந்தாள்?"

"பிரஞ்ஞையற்று இருந்தாள். நாடித்துடிப்பு மிகவும் குறைந்திருந்தது, இரத்த அழுத்தமும் குறைவாகக் காணப்பட்டது. மூச்சு மெதுவாக வந்தது."

"குழந்தை எப்படி இருந்தது?"

"இறந்துவிட்டது."

"கடலில் விழுந்ததால் மூர்ச்சையானாள் என்பதற்கு அறிகுறிகள் ஏதாவது இருந்ததா?"

"முதற்சிகிச்சை செய்ததும், வாயிலிருந்து வழிந்த தண்ணீர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. கடல் நீருக்குள்ள தன்மை அதில் காணப்பட்டது. மூர்ச்சையாவதற்குமுன் கடல் நீரைக் குடித்திருக்கவேண்டும்."

"மூர்ச்சை தெளிவதற்கு எவ்வளவு நேரம் பிடித்தது?"

"அரைமணி நேரம் இருக்கும்."

"மூர்ச்சை தெளிந்ததும், எதிரி ஏதாவது சொன்னாளா?"

"மூர்ச்சை தெளியும்பொழுது அருகில் நான் இல்லை. டாக்டர் தங்கம் இருந்தார்கள்."

"சரி" என்று கமலநாதன் தன் கேள்விகளை முடித்துக்கொண்டான்.

அடுத்தபடி குலசேகரன் எழுந்தான்.

"மூர்ச்சையான பெண்ணைக் கொண்டுவரும்பொழுது சரியான மணிநேரம் என்ன?"

"12-35."

"பெண்ணுக்கு மூர்ச்சை தெளியும்பொழுது மணி என்ன இருக்கும்?"

"12-55 இருக்கும்."

"இறந்த குழந்தையை எப்பொழுது மரண பரிசோதனைக்கு அனுப்பினீர்கள்?"

"ஒரு ஐந்து நிமிஷங்கழித்து."

"சரி" என்று குலசேகரன் உட்கார்ந்து கொண்டான்.

அடுத்தபடியாக "டாக்டர் தங்கம்! டாக்டர் தங்கம்!" என்று கோர்ட் சேவகன் கூப்பிட்டான். தங்கம் எழுந்துபோய் சாட்சி சொல்ல

இடத்தில் நின்றாள். கோர்ட் உதவியாளன் எழுந்து, "நான் கொடுக்கும் சாட்சியத்தில் உண்மையை, முழு உண்மையைத் தெரியப் படுத்துவதாகவும், உண்மையைத் தவிர வேறெதையும் சொல்லாமலும் இருப்பதாக சத்தியம் செய்துகொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொடுத்தான். தங்கம் அதைத் திரும்பச் சொன்னாள்.

கமலநாதன் எழுந்தான். தன் சொந்த மனைவியைக் கோர்ட்டில் நிறுத்திவைத்து, எப்படிக் கேள்வி கேட்பது என்று அவனுக்குச் சற்றுத் திகைப்பாக இருந்தது. இருந்தாலும் கோர்ட்டில் அவன் அரசாங்கத்தின் பக்கம் வாதாடும் வழக்கறிஞன். சட்டத்தை மீறும் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தண்டனை தந்து சமூகத்தைப் பாதுகாக்கும் உன்னதமான பணியில் ஈடுபட்டிருப்பவன். சாட்சியம் சொல்பவர்கள்—எந்தப் பக்கத்தைச் சார்ந்தவர்களாய் இருந்தாலும் தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லி, வழக்கில் நிலைநிறுத்தவே பாடுபடுகிறார்கள். வழக்கறிஞரும், சாட்சியும் நீதிபதிக்குத் துணைசெய்யவே வரவழைக்கப்படுகின்றனர். அந்தவகையில் வழக்காடும் கமலநாதனும், சாட்சி சொல்லும் தங்கமும் ஒரே வகையினர்தாம்.

கமலநாதனும் தங்கமும் தங்கள் வாழ்க்கையில் கணவன் மனைவியர்; ஆனால் இங்கு நீதிமன்றத்தில் கமலநாதன் அரசாங்க வழக்கறிஞன்; சாட்சியம் கொடுப்பவர்களில் ஒருத்தி தங்கம்!

கமலநாதன் சாட்சி நிற்குமிடத்துக்கு அருகில் வந்தான். தங்கம் கூச்சத்துடன் தலையைத் தாழ்த்திக்கொண்டாள். கமலநாதன் வழக்கமான கேள்விகளை ஆரம்பித்தான்.

"உங்கள் பெயரென்ன?"

"தங்கம்!"

"தொழில்?"

"டாக்டர் வேலை!"

"எவ்வளவு காலமாக அந்த ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கிறீர்கள்?"

"மூன்று ஆண்டுகளுக்கு மேலாக!"

"எதிரியை முதல் தடவையாக எப்பொழுது பார்த்தது?"

"எட்டு மாதங்களுக்கு முன்பு!"

"சரியான தேதி குறிப்பிடமுடியுமா?"

"இப்பொழுது முடியாது!"

"உங்களுடைய ஆஸ்பத்திரிக் குறிப்புப் புத்தகம் இதோ, இருக்கிறது! சென்ற ஆண்டு, பதினெட்டாந்தேதி அதில் 'சகுந்தலா' என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறதே! அது எதிரியின் பெயர்தானே?"

"ஆமாம்."

"இந்தக் குறிப்பு போடப்பட்டது உங்களால்தானே?"

"ஆமாம்."

"அப்பொழுது எதிரி எதற்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டாள்?"

"களைப்பு மிகுதியால் மூர்ச்சைபோட்ட நிலையில்."

"அப்பொழுது அந்தப் பெண் பூரண கர்ப்பத்துடன் இருந்தாளா?"

"ஆம்! ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட மூன்றாவது நாள் குழந்தை பிறந்தது."

"இறந்துபோன குழந்தை அந்தக் குழந்தைதானே?"

"ஆமாம்!"

"ஆகக் குழந்தைக்கு வயது எட்டு மாதத்திற்கு மேல் ஆகவில்லை!"

"எட்டு மாதந்தான்."

சிறிதுநேரம் கமலநாதன் கேள்வி கேட்பதை நிறுத்தித் தன் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தான். தங்கத்திற்குப் பக்கத்தில் சுற்றுமுற்றும் பார்ப்பதற்கு அவகாசம் கிடைத்தது. குலசேகரன் உட்கார்ந்து புத்தகமொன்றைப் புரட்டிக்கொண்டிருப்பதும், தூரத்தில் டாக்டர் சஞ்சீவி உட்கார்ந்திருப்பதும் அவளுக்குத் தெரிந்தது. நீதிபதியாக உட்கார்ந்திருப்பவரை அதற்குமுன் ஏதோவொரு விருந்தில் சந்தித்திருப்பதாக அவளுக்கு ஞாபகம். ஆனால் எங்கு என்று திட்டமாகக் கொள்ளமுடியவில்லை. கடைசியாகக் குற்றவாளிக் கூண்டில் உட்கார்ந்திருக்கும் சகுந்தலாவைத் தங்கம் பார்த்தாள். மிகவும் சோர்வடைந்து, இரங்கத்தக்க நிலைமையில் அவள் உட்கார்ந்திருந்தாள். அதிலும் அவள் உடுத்திருந்த கருப்பு உடை அவளுடைய சோகத்தை அதிகமாக்குவது போலக் காணப்பட்டது.

கமலநாதன் மீண்டும் தனது கேள்விகளை ஆரம்பித்தான். முன்னைவிடச் சற்றுத் தைரியமடைந்தவளாய் தங்கம் கேள்விகளுக்குப் பதில் சொன்னாள்.

" பிரசவ ஆஸ்பத்திரியை விட்டு வந்ததும், எதிரி அனாதைச் சிறுவர் இல்லத்தில் வேலைக் கமர்த்தப்பட்டாளா?"

" ஆமாம்!"

" எவ்வளவு காலம் அவள் அங்கு வேலை செய்தாள்."

" எட்டு மாதங்களாக."

" வேலை செய்யும்பொழுது, அவளிடம் ஏதாவது குறை காணப்பட்டதுண்டா?"

" கிடையாது. வேலை திருப்திகரமாகவே இருந்தது."

" வேலையில் அதிருப்தி அடைந்ததாக அவள் எப்பொழுதாவது காட்டிக்கொண்டதுண்டா?"

" இல்லை."

" கடைசியாக அவளை நீங்கள் எப்பொழுது பார்த்தது?"

" அனாதைச் சிறுவர் இல்லத்து ஆண்டு விழாவில்."

" அன்று மாலை தான் போகவேண்டுமென்று எதிரி ஏதாவது கூறியதுண்டா?"

" கூறவில்லை."

" திருப்திகரமாக நடந்துகொண்டபின் திடீரென்று வேலையைவிட்டுப் போகக் காரணம் ஏதாவது தரப்பட்டதா?"

" ஒன்றும் தெரியாது!"

" வேலையைவிட்டுப் போனதும் எவ்வளவு நாட்கள் கழித்து, அவள் மீண்டும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டாள்."

" நான்கு நாட்கள் கழித்து."

" வேலையைவிட்டுப் போவதற்குமுன் வாழ்வைப்பற்றி அதிருப்தியடைந்தோ, வாழ்வதை விடத் தற்கொலை செய்துகொள்வது மேல் என்றோ எதிரி எப்பொழுதாவது சொல்லியதுண்டா?"

" இல்லை!"

கமலநாதன் தன் கேள்விகளை முடித்து உட்கார்ந்தான். குலசேகரன் எழுந்து "நான்கேட்கக்கூடிய கேள்விகள் ஒன்றும் இல்லை" என்று சொன்னான். தங்கம் சாட்சிக் கூண்டைவிட்டு வெளியேறினாள்.

" நீங்கள் இரண்டு கேள்விகள் கேட்க மறந்துவிட்டீர்கள்!" என்று தங்கம் வீட்டிற்குத் திரும்பிப் போகும்பொழுது கமலநாதனிடம் சொன்னாள்.

" என்ன அந்தக் கேள்விகள்?"

" உன்னுடைய கணவன் பெயர் என்ன அவருக்கு என்ன வேலை!"

" இந்தக் கேள்வியெல்லாம் சாட்சிகளைக் கேட்டுப் பயன் இல்லை. குற்றஞ்சாட்டியிருந் தால் கேட்கலாம் நீ என்ன குற்றங்கள் செய் திருக்கிறாய்?"

" அப்பா! எவ்வளவு கேள்விகள், பதில் சொல்வதற்குமுன் போதுமென்றாகி விடு கிறது!"

" பதில் சொல்வதில் என்ன கஷ்டமென்று தெரியவில்லை. பொய் சொல்வது என்றால் கஷ்டம். ஒரு உண்மையை மறைத்துச் சொல்வ தென்றால் ஆயிரம் விதங்களில் பொய் சொல்ல லாம். ஆனால் உண்மையைச் சொல்வதென் றால், ஒரே ஒரு வகையில்தான் சொல்லமுடி யும். ஒரு பதிலுக்கு மற்றொரு பதில் முரண் பாடு என்ற தொல்லை வராது."

* * *

குலசேகரன் தானெடுத்த வழக்கில் மிகவும் கண்ணுங்கருத்துமாயிருந்தான். கேள்வி கேட் பதிலும், சாதகமானப் பதிலைப் பெறுவதிலும், அவன் மிகத் திறமையுடன் வாதிட்டான். மற்ற சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது சகுந்தலா எப்படிக் கடலில் காணப் பட்டாள், பிறகு எப்படிக் காப்பாற்றப்பட்டாள் என்றெல்லாம் தெரியவந்ததேயொழிய, சகுந் தலாவிடமிருந்து எத்தகைய விளக்கத்தை யும் அவனால் பெறமுடியவில்லை, அவள் தற் கொலைசெய்துகொள்ளக் கடலில்விழுந்தாளா? அல்லது தவறி விழுந்தாளா? அவளுக்காக வாதிடும் வக்கீலுக்கே தெரியவில்லை! தற் கொலை செய்துகொள்ளத் தான் விழுந்ததாகச் சகுந்தலா சொன்னது அவனுக்கு அடிக்கடி ஞாபகம் வந்தது. ஏன் தற்கொலை செய்து கொள்ளப்போனாள்? சிறிதுகூட ஊகித்துக் கொள்ளமுடியவில்லை. தற்கொலை செய்து கொள்ள ஒருவனோ ஒருத்தியோ ஏன் முயற் சிக்கவேண்டும்? வாழ்க்கையில் எதிர்பாராத ஏமாற்றமோ, திடீர் அதிர்ச்சியோ, இனி வாழ முடியாது என்ற பலவீனமோ வந்திருக்க வேண்டும். சகுந்தலா வாழ்வில் அத்தகைய சம்பவம் என்ன வந்திருக்கமுடியும்? குற்றம் செய்வதென்றால் அதற்கு முக்கியமான கார ணம் என்னவென்று கண்டுபிடிக்க வேண்டும். சகுந்தலா வழக்கில் அந்தக் காரணத்தைக் கண்டுபிடிக்கவில்லை. குலசேகரன் அதைப் பற்றி யோசித்தபடி இருந்தான்.

(தொடரும்)

பிள்ளையார் சுழி

[இரா. நெடுஞ்செழியன்]

ஒரு காலத்தில் இன்றியமையாத பழக்கமாக இருக்கும் ஒன்று, பிற்காலத்தில், தேவையற்ற நிலையில், காரணகாரிய விளக்கமின்றிக் கையாளப்படும்போது, அந்தப் பழக்கம் மூடப்பழக்கம் என்று பெயர் பெறுகிறது. அப்படிப்பட்ட மூடப்பழக்கங்களிலே ஒன்றுதான், இந்தக்காலத்தில் எது ஒன்று எழுதுவதற்கு முன்னும் 'பிள்ளையார் சுழி' இடுவதாகும்.

அஞ்சல்கள், முடங்கல்கள், அழைப்பிதழ்கள், வரவு-செலவு கணக்குகள், விலைப்பட்டிகள், ஏடுகள், கல்வெட்டுகள் போன்ற எதனை எழுத முற்பட்டாலும், வைதீக உள்ளம்படைத்தோர் 'உ' என்று பிள்ளையார் சுழியினைப் போட்டுவிட்டுப் பிறகு எழுதவேண்டியதை எழுதுகிறார்கள்.

ஏன் பிள்ளையார் சுழி போடவேண்டும் என்று கேட்டால், எழுதப்படுபவை 'விக்நம்' ஆகாமல் இருக்கவேண்டுமானால், 'விநாயகரை' நினைத்துக்கொள்ளவேண்டும் என்றும், 'விநாயகர் சுழி'யின் மூலம் 'விநாயகரை' நினைத்துக்கொண்டால் எந்தப் பிழையும் ஏற்படாது என்று பொதுவாக வைதீகர்கள் சொல்லுகிறார்கள். பிள்ளையார் சுழி ஏன் 'உ' என்று போடவேண்டும் என்று கேட்டாலும், பிள்ளையாருக்கும் 'உ'க்கும் என்ன தொடர்பு என்று கேட்டால் பெரும்பாலான வைதீகர்களுக்குக் காரணந் தெரிவதில்லை; "ஏதோ பழைமைக் காலந்தொட்டுப் பெரியோர்கள் அந்தப்பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே நாங்களும் அந்தப் பழக்கத்தைக் கொண்டிருக்கிறோம்" என்று கூறிவிடுவதோடு நிறுத்திக்கொள்கிறார்கள். சமாதானம் கேட்பவர்களுக்கு ஏதேனும் ஒரு சமாதானம் சொல்லித்தீரவேண்டுமே என்பதற்காக மிகக் கவலை எடுத்துக்கொண்டு, ஆதாரம் காட்டுவதற்கு ஏதும் இல்லாததால், தங்கள் சொந்த அறிவுத்திறனைப் பயன்படுத்திப், பிள்ளையாரின் துதிக்கையில் வடிவந்தான் 'உ' என்று போடப்படுகிறது என்றும் கூறிச், சில வைதீகர்கள் தங்களையும், தங்கள் பிள்ளையார் சுழிக் கொள்கையையும் காப்பாற்றிக்கொள்ள முயலுகிறார்கள்.

'உ' என்று குறியிடும் பழக்கம் தமிழகத்தைத்தவிர இந்தியத் துணைக்கண்டத்தின் வேறு எந்தப் பகுதியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. பழந் தமிழ் நாகரிகத்தோடு வளர்ந்துவந்த நாகரிகப் பிடிப்பு மாறுபடாமல் இருந்துவரும் தெலுங்கு—கன்னட—மலையாளப் பகுதிகளின் சிற்சில இடங்களில் வேண்டுமானால் 'உ' போடும் பழக்கம் இருக்கக்கூடும். ஆனால் வடநாட்டிலும், வடமொழி நாகரிகம் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளிலும் 'ஓம்' என்னும் ஒலிக்குறிப்பைச் சுட்டிக்காட்டும் எழுத்தினையே முதலில் எழுதும் எழுத்தாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் 'ஓம்' என்ற பிரணவத்திற்கும் பிள்ளையாருக்கும் தொடர்பு படுத்தி வைத்திருக்கிறார்களா என்பதும் ஐயப்பாடாகவே இருக்கிறது. அந்த 'ஓம்' என்பதன் திரிபுதான் 'உ' என்று சிலர் கூற முன்வருவார்களேயானால், அத்தகையோரின் கூற்று அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வருவதாக இல்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 'உ'க்கும் பிள்ளையாருக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பதை வரலாற்றுமுறையில் ஆராயும் போது, விடை வியப்பு தருவதாகவே அமைந்திருக்கிறது. விநாயகரைத் தமிழக மக்கள் கி. பி. ஏழாவது நூற்றுண்டுக்கு முன்னல் அறியமாட்டார்கள். கி.பி. ஏழாவது நூற்றுண்டுக்கு முன்னல் விநாயகருக்குத் தமிழகத்தில் கோயில் எதுவும் இருந்ததில்லை, விநாயகரைப் பற்றிய குறிப்பும் தமிழகநூல்கள் எதிலும் காணப்பட்டதில்லை. இந்த உண்மையை அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருப்பவரும், கல்வெட்டு ஆராய்ச்சியாளருமான தோழர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தமது ஆராய்ச்சிக் குறிப்பொன்றில் வெளியிட்டுள்ளார். தோழர் தெ. பொ. மீனட்சிசுந்தரனர் அவர்களும் 'பிறந்தது எப்படியோ?' என்ற தலைப்புக்கொண்ட நூலில், பிள்ளையார் பிறப்பைப்பற்றி எழுதும்போது, பிள்ளையார் கி. பி. ஏழாவது நூற்றுண்டில்தான் தமிழகம் வந்து சேர்ந்தார் என்ற உண்மையைப் புலப்படுத்தி

யுள்ளார். காஞ்சிபுரத்தை நரசிம்மப் பல்லவன் ஆண்டபொழுது, அவனுக்குப் படைத்தலைவனாக இருந்த பரஞ்சோதி, வடநாட்டில் வாதாபியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்த இரண்டாவது புலிகேசி மன்னனை எதிர்த்துப் படையெடுத்துச் சென்று, போரில் புலிகேசியைத் தோற்கடித்ததோடு, வாதாபி நகரையும் அழித்து, அங்கிருந்து வெற்றிச் சின்னங்களாகப் பல்வேறு பொருள்களைக் கவர்ந்துவந்தான். அப்படிக் கொண்டுவந்த பொருள்களில், விநாயகர் சிலையும் ஒன்றாகும். பரஞ்சோதி அந்த விநாயகர் சிலையைத் தன்னுடைய சொந்த ஊராகிய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்காட்டாங்குடியில் முதன் முதல் நிலைநாட்டினான். அதைப் பார்த்துச் செதுக்கப்பட்ட சிலைகள்தாம், அடுத்தடுத்து ஆங்காங்கு நிலைநாட்டப்பட்டவையாகும். எனவே கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு முன்னால் தமிழகம் பிள்ளையாரையே அறியாது என்றால், 'பிள்ளையார் சுழி'யை எங்கிருந்து அறிந்திருக்கப்போகிறது. வரலாற்றின் உண்மைச் சான்றுகளைக் கொண்டு ஆராயும்போது 'பிள்ளையார்' தான் இறக்குமதி செய்யப்பட்டதாகத் தெரியவருகிறதேயல்லாமல், 'சுழி' இறக்குமதி செய்யப்பட்டதற்கான சான்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. 'உ' என்ற குறியீடு, பிள்ளையார் வருவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்புதொட்டே, பழந்தமிழ் நாகரிகத்தோடு ஒன்றி நின்றுவந்த பழக்கமாகும் என்று துணிவதற்கு இடமிருக்கிறது.

மிக அண்மைக்காலம் வரையில், தமிழகம், எழுத்தாணி கொண்டு பனையோலையில் எழுதும் நாகரிகத்தைதான் கொண்டிருந்தது. தமிழ் எழுத்துக்களெல்லாம் பண்டைக்காலந் தொட்டே வட்டக்கோடுகளாலும், நீட்டக் கோடுகளாலும் எழுதப்பட்டு வருபவையாகும். எழுதப்படும் பனையோலைகளெல்லாமும் எப்பொழுதும் பண்பட்ட பனையோலைகளாக இருப்பதில்லை. சில பனையோலைகள் மிகவாகப் பழுத்து. மழையில் நன்கு ஊறிக்கிடந்து, வெய்யிலில் மிகக்காய்ந்துவிடுமேயானால், அப்படிப் பட்ட ஓலைகளில் எழுத முற்பட்டால், அவை ஒடிந்து, நொறுங்கித், தூள்தூளாகிவிடும். சிலவேளைகளில் எழுத்தாணி மிகக் கூர்மையாகத் தீட்டப்பட்டிருக்குமேயானால், அதனைக் கொண்டு பனையோலைகளில் எழுதும்போது, பனையோலைகளில் எழுத்துக்களுக்குப் பதிலாகப் பொத்தல்கள் விழுந்துவிடும். இப்படிப் பட்டக் குறைபாடுகளை எழுதுவதற்கு முன் கூட்டியே தெரிந்துகொண்டால், நேரமும் உழைப்பும் வீணாகாமல் இருக்குமே என்று கருதிப், பனையோலையின் பதத்தையும் எழுத்தாணியின் கூர்மையையும் ஆராய்ந்தறிவதற்காக 'ο' என்ற ஒரு வட்டக் கோட்டையும், '—' என்ற ஒரு நேர்க்கோட்டையும் இழுத்துப் பார்க்கப் பழகிக்கொண்டனர் பண்டைக்காலத் தமிழ்மக்கள். ஒரு வட்டக்கோட்டையும் (ο) ஒரு நேர்க்கோட்டையும் (—) இழுத்துப்பார்க்கும் பயிற்சிதான் 'உ' என்பதாகும். இந்த அறிவுக்கொத்த, இன்றியமையாத பழக்கத்தின் உண்மை விளக்கத்தை அறிந்துகொள்ளாத—அறிந்துகொள்ள முயற்சி செய்யாத பிற்காலத்து மக்கள், 'மதபக்தி'யில் மிதமிஞ்சி மூழ்கிப்போயிருந்த காரணத்தால், அந்த 'உ' என்ற குறீட்டிற்குத் 'தெய்வீகத்'தைக் கற்பித்து, அதற்குக் கண் காது, மூக்குமுழி, வாய் வயிறு, தொந்தி துதிக்கை, மூஞ்சூறு வாகனம் கொழுக்கட்டை உணவு எல்லாம்வைத்து அதனைப் 'பிள்ளையார் சுழி'—ஆக்கிவிட்டு விட்டனர்.

'உ' என்பது ஓலையையும் ஆணியையும் சரி பார்த்துக்கொள்வதற்கான 'அறிகுறி' என்று எண்ணாமல், அப்படிப் போடுவது பக்திச் செயல்களிலே என்று எண்ணிடும் அளவுக்குப் பிற்கால வைதீகத் தமிழர்கள் குருட்டு நம்பிக்கையை அதன்மீது ஏற்றிக் கொண்டாடிவரலாயினர்.

'உ' என்ற அறிகுறி எதற்கு எழுதுகிறோம், ஏன் எழுதுகிறோம் என்ற உண்மைவிளக்கம் தெரியாமல், அதனைப் 'பிள்ளையார் சுழி'யாக மாற்றினதுபோல, மதபக்திகொண்டோர் அவரவர் பக்திக் கேற்ப 'சிவபெருமான் துணை' 'முருகன் துணை', 'கண்ணன் துணை', 'திருமால் துணை' என்று பல்வேறுவிதமாக மாற்றிக் கொள்ளவும் செய்தனர். சிலர் 'பிள்ளையார் சுழி'யையும் போட்டுத், தமக்கு வேண்டிய வேறு சில 'துணை'களையும் போட்டுக்கொண்டனர்.

ஓலையும் எழுத்தாணியும் கொண்டிருந்த காலத்தில் தேவைப்பட்ட 'உ' என்ற அறிகுறி தாளும் மையூற்றுக்கோலும் ஏற்பட்டுவிட்ட இந்தக்காலத்தில் தேவையற்ற ஒன்றாக ஆகிவிட்டது. எனவே 'உ' என்ற அறிகுறியைப் பிள்ளையார் சுழியாகக் கருதுவது மூடநம்பிக்கையின்பாற்பட்டதாகும்; தாளும் மையூற்றுப் பேனாவும் பயன்படுத்தப்படும் இந்தக்காலத்தில் 'உ' என்று முதலில் எழுதுவது மூடப் பழக்கத்தின்பாற்பட்டதாகும்! அந்த அறிகுறி இந்தக்காலத்திற்கு எந்தவகையிலும் தேவைப் பட்டதொன்று அல்ல!

கண்காட்சி

[பரணன்]

கண்காட்சி! கண்ணுக்கினிய — கருத்துக்கினிய காட்சிகளை ஒழுங்குபெற அமைத்துக்கொண்டு, அவற்றைக் கண்டுகளிக்கும் பழக்கம், நாகரிகத்தின் சாயல் ஒரு சிறிதும் படாத காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே உலகெங்கணும் இருந்துவந்திருப்பதைக் காண்கிறோம்! கண்காட்சி காலத்தினால் மிகமிகப் பழைமையானது!

காட்டுமிராண்டிக் காலத்தில், மக்களில் வீரமும் தீரமும் படைத்தோர், நாள்தோறுமோ அல்லது நாட்கணக்கிலோ வேட்டையாடிக் கொண்டுவந்த உயிரினங்களை வரிசையாகப் பரப்பிவைக்க, வலிவற்றோர் அவற்றைப் பார்த்து வியக்க, அவர்கள் வியப்பதுகண்டு வேட்டையாடிவந்தோர் மகிழ நடைபெற்ற காட்சி முதற் கண்காட்சி என்னலாம். உணவுக்கான வேட்டைகள் குவியும்போது மக்கள் கூடுவதும், மகிழ்ச்சியால் குதித்தாடுவதும், ஓசையிட்டுப் பாடுவதும், வேட்டையாடுவதற்குக் காரணமாக இருந்த எலும்பு—கல்—மரம் ஆகியவற்றாலான கருவிகளை அடுக்கிவைத்து அழகு பார்ப்பதும், விதவிதமான தோலாடைகளையும் தழையுடைகளையும் விதவிதமாக உடுத்திக்கொள்வதும், பூக்கள்-காய்ந்த விதைகள்—விலங்குகளின் பற்கள் நகங்கள் ஆகியவற்றைக் கோர்த்து அணிகலன்களாக அணிந்துகொள்வதும் ஆகிய இவைபோன்ற எல்லாவற்றையும் ஒருங்குசேரக் கொண்டு அழகுபார்த்து மகிழ்வது, காட்டுமிராண்டிக் காலத்து மக்களின் கண்காட்சியாகும்.

தன்னையும் தன்னுடைய சூழ்நிலையையும், கண்ணுக்கும்—கருத்துக்கும் இனிய காட்சிப் பொருள்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற பண்பு, மனிதனுக்கு ஒழுங்குபடுத்தும் உணர்வு ஏற்பட்ட மிகமிகத் தொன்மைக் காலந்தொட்டே இருந்துவருகிறது என்று கூறலாம். நாகரிக வளர்ச்சி அந்தப் பண்பின் நோக்கம், ஆற்றல், பல்வேறு திறப்பாடு ஆகியவற்றை விரிவடையச் செய்ய உதவிற்றேயொழிய, நாகரிகமேதான் அந்தப் பண்பை உண்டாக்கிற்று என்று சொல்லுவதற்கில்லை; நாகரிகம் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே அந்தப் பண்பு மனிதனிடம் ஊற்றெடுக்கத் துவங்கிவிட்டது.

மிகப் பழையகாலந்தொட்டே பட்டக்காரர்களும் பாளையக்காரர்களும், சிற்றரசர்களும் பேரரசர்களும் தம்முடைய வெற்றிப்பொருள்கள், விருதுகள், யானைகள், குதிரைகள், தேர்கள், கொடிகள், படைக்கருவிகள், படைவீரர்கள், மதிப்பிற்குரிய பொருள்கள், மனைவிமார்கள், அமைச்சர்கள், அறிவுரையாளர்கள் ஆகியோரையெல்லாம் அணிவகுத்துத் தம்முடன் அழைத்துக்கொண்டு உலாவாக ஊர் சுற்றிவருதலை ஒரு கண்காட்சியாகவே கொண்டிருந்தனர்—கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் பண்டுதொட்டுக் கொண்டாடப்பெறும் ஒவ்வொருவகைத் திருவிழாவும் ஒவ்வொரு கண்காட்சியாகும். பண்டைத் தமிழகத்தில் கடவுளர்க் கெடுத்த திருவிழாக்களும், காவிரிப்பூம்பட்டினத்தில் கொண்டாடிய கடலாடுதல்போன்ற விழாக்களும், ஏறுதழுவுதல் போன்ற விழாக்களும் ஒவ்வொருவகைக் கண்காட்சிகளேயாகும். வடநாட்டில் பண்டைநாளில் நடைமுறையில் இருந்துவந்த அசுவத்தைப் பூப்பிரதட்சணம் கொண்டுவருதலும், சுயம்வரம் வைத்தலும் ஆன நிகழ்ச்சிகள் ஒவ்வொருவிதமான கண்காட்சிகளேயாகும். பண்டைக் கிரேக்கத்தில் சந்தைக்கூடமும், கிரேக்கச் சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவாற்றிய மேடைகளும், திறந்த வெளி நாடக அரங்கமும் அந்த நாளைய கண்காட்சிகளாக இலங்கின. பண்டைக் கிரேக்கர்கள் ஒலிம்பியாவில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடி நடத்திய ஒலிம்பிக் விழாவும் ஒரு பெரிய கண்காட்சியாக அந்தக் காலத்தில் கருதப்பட்டது. விளையாட்டுப் பந்தயங்கள் நடப்பதும், புலவர்கள் தங்கள் இலக்கியங்களை அரங்கேற்றுவதும், வரலாற்றாசிரியர்கள் தாம் எழுதிய வரலாறுகளைப் படித்துக் காண்பிப்பதும், சிற்பிகள் தாம் செதுக்கிய சிற்பங்களைக் காட்சிப்பொருள்களாக வைப்பதும், ஓவியக்காரர்கள் தமது ஓவியங்களைக் காட்டுவதும், பாடகர்கள் பாட்டுப்பாடித் தம் திறனை வெளிப்படுத்துவதும், போர்வீரர்கள்

தம் வீரவிளையாட்டுகளைக் காட்டுவதும் ஆன இவைபோன்றவைகள் அந்த ஒலிம்பிக் கண்காட்சியின் கூறுபாடுகளாக விளங்கின. ஒவ்வொரு நாட்டிலும் கூடிய—கூடும் சந்தைக் கூட்டங்களெல்லாம் வாணிக நோக்கத்தை உள்ளடக்கிக்கொண்ட ஒவ்வொருவகைக் கண்காட்சிகளேயாகும். ஒவ்வொரு சந்தைக்கூடமும் வாணிகம் செய்வதோடு நின்றுவிடாமல், வேடிக்கைவிளையாட்டு காட்டுமிடமாகவுந்தான் காட்சியளித்துவந்திருக்கிறது. தெருக்கூத்தாடுதல், கழைக்கூத்தாடுதல், பாம்பாட்டுதல், பகல்வேடம் புனைதல், குடக்கூத்தாடுதல், தந்திர வேடிக்கை காட்டுதல் போன்றவைகள் சந்தைக்கூடத்திலும் பிற இடங்களிலும் காட்டப்பட்டுவந்த கண்காட்சிகளாகும். இப்படிப்பட்டக் காட்சிகள் பிறநாடுகளிலும் உண்டு. பிரான்சும், பெல்சியமும் இத்தகைய காட்சிகளை மிகவாகக் கொண்டிருந்தன.

மகிழ்ச்சியூட்டும் நோக்கோடு பண்டைநாட்களில் நிலவிவந்த காட்சிகள் நாளடைவில் மகிழ்ச்சியூட்டுவதோடு வாணிகத்தைப் பெருக்குவதற்கான கண்காட்சிகளாக மாறின. இப்பொழுது உலகெங்கும் நடக்கும் கண்காட்சிகள் மகிழ்ச்சி—வாணிகப்பெருக்கம் ஆகிய இரண்டோடு பயனறிவும் பயக்கவேண்டும் என்ற நோக்கோடு அமைக்கப்பெறுகின்றன.

அகில உலகத் தொடர்பும், அகில உலக வாணிகமும் நாடுகளுக்கிடையே ஏற்பட ஏற்பட, வாணிகப்பொருள்களைச் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தக் கண்காட்சிகளை நிறுவ வேண்டிய இன்றியமையாமைக்கு ஒவ்வொரு நாடும் வந்துவிட்டது. கண்காட்சியின் கவர்ச்சியால் ஈர்க்கப்படும் மக்களிடையே, வாணிகப் பொருள்களை விற்பனை செய்வதும், வாணிகப் பொருள்களுக்கு விளம்பரம் தேடுவதும் உற்பத்தியாளர்க்கு எளிதாக இருப்பதால், அவர்கள் கண்காட்சிகளை ஏற்பாடுசெய்ய இது நாளில் உலகெங்கணும் முயலுகிறார்கள். எந்த ஒரு துறையைப்பற்றிய அறிவைப் பரப்பவும், எந்த ஒரு துறைக்கு விளம்பரந்தேடவும், எந்த ஒரு துறையின் பெருமையை விளக்கவும் இந்தக் காலத்தில் 'கண்காட்சி' பயன்படுவதுபோல வேறு எந்தப் பற்றுக்கோடும் பயன்படுவதில்லை. எனவேதான் உலக நாடுகளிலெல்லாம் அறிவியல், பொறியியல், கலையியல், மொழியியல், அரசியல், சமூகவியல், பொருளியல், தொழிலியல் போன்ற பல்வேறு இயல்கள் பற்றிய கண்காட்சிகள் எங்கணும் தோன்றுகின்றன,

காட்சிக்குரிய பல்வேறு அரிய வியத்தகு பொருள்களை ஓரிடத்தில கண்காட்சிக்கென்று திரட்டி, அவற்றை ஒழுங்குபட வைத்துப், பொதுமக்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்து பயன்பெறும்படி செய்யவேண்டும் என்ற முயற்சியில் தோன்றும் கண்காட்சிகளில், வரலாற்றுக்காலத்திற்குள் முதற் காட்சியாகத் தென்படுவது கி. மு. 427-ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் சாம்பன் (Champayne) என்ற இடத்தில் வைக்கப்பட்டக் கண்காட்சியேயாகும். அதே ஆண்டில் பிரீ (Brie) என்ற இடத்திலும் ஒரு கண்காட்சி நடைபெற்றிருக்கிறது. இந்தச் செய்தியை சிதோனியச் அபோலினிசிச் (Sidonuis Apollinasis) என்ற ஆசிரியர் எழுதிய குறிப்பிலிருந்து அறியப்படுகிறது. கி. பி. பத்தாவது நூற்றாண்டில் இங்கிலாந்திலும், வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் கண்காட்சிகள் வைத்ததாகச் சிற்சில குறிப்புகளிலிருந்து தெரியவருகின்றது. கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மகிழ்ச்சிக்குரியனவாக வைக்கப்பட்ட கண்காட்சிகளில் வாணிகப் பெருக்கத்திற்கான வழிவகைகளும் காணப்பட்டன. இப்படி மகிழ்ச்சிக்கும் வாணிகத்துக்கும் ஆன முறையில் அமைக்கப்பட்ட கண்காட்சிகள் பல ஐரோப்பிய நாடுகளில் பல இடங்களிலும் நடைபெற்றன.

ஐரோப்பாவில் நடைபெற்ற கண்காட்சிகளில் நிக்னி நௌகோராட் (Nigni Novgorod) என்ற இடத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றக் கண்காட்சி மிகச்சிறப்பாக இருந்துவந்தது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் ஆரம்பித்த அந்தக் கண்காட்சி ஆண்டுதோறும் வைக்கப்பட்டு, மிகச் சீரும் சிறப்புடன் நடந்துவந்தது. முதல் உலகப் பெரும்போருக்கு முன்னால், ஐரோப்பா-ஆசியா நாடுகளிலிருந்து மட்டும் ஆண்டுதோறும் சுமார் 1 லட்சம் மக்கள் வந்தார்கள் என்றும், சிறுசிறு வியாபாரங்களையெல்லாம் தள்ளிவிட்டுப் பெரு வியாபாரங்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டால் $37\frac{1}{2}$ கோடி பொன் ரூபிள் நாணயங்கள் அளவிற்கு வியாபாரம் நடைபெற்றது என்றும் சொல்லப்படுகின்றன.

இந்தக் காலத்தில் நடைபெறும் பொதுக் கண்காட்சிகளெல்லாம், 1849-ஆம் ஆண்டில் பாரிசில் நடைபெற்ற கண்காட்சியை அடிப்படையாகக்கொண்டு தோன்றியவைகளாகும் என்று கூறலாம். சென்ற நூற்றாண்டில் மேலைநாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகளிளெல்லாம் மிகப்பெரியகண்காட்சி 1851-ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற "பெரிய பிரிட்டன் கண்காட்சி" ஆகும். இதற்குப் பாரிச் கண்

காட்சிதான் முன்மாதிரியாகும். அந்தக் கண்காட்சியின் முழுப்பெயர் "எல்லா நாடுகளின் பொறித் தொழில் சாமான்களின் பெரிய கண்காட்சி" (Great Exhibition of the works of Industry of all Nations) என்பதாகும். இந்தக் கண்காட்சி இலண்டன் மாநகரில், ஹைட் பார்க் (Hyde Park) என்ற பூங்காவெளியில் வைக்கப்பட்டது. கண்காட்சியை எப்படி அமைக்கலாம் என்பதற்கு 245 பேர்கள் மாதிரிப் படங்கள் வரைந்து காட்டினார்களாம். எந்த ஒரு படமும் தனியாகப் பயன்படவில்லையாம். பல படங்களிலிருந்து மாதிரிகளை எடுத்து ஒன்றுகச் சேர்த்துப் புதிய மாதிரி ஒன்று கண்டுபிடித்தார்களாம். அரிய கண்காட்சிப் பொருள்களை வைப்பதற்கென்று கிரிச்டல் பாலச் (Crystal Palace) என்ற ஒரு பெரும் மாளிகையை இரும்பினாலும் கண்ணாடியினாலும் கட்டிமுடித்தார்கள்.

இந்த மாபெரும் கண்காட்சியை நடத்திய தன் மூலம் இலண்டன் மிகப் பெரு வருவாயை அடைந்தது. இந்தக் கண்காட்சியில் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் 13,937 பேரும், பிரிட்டிச் பேரரசைச்சேர்ந்தவர்கள் 7381 பேரும் காட்சிப் பொருள்களைக் காட்டினார்கள். ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட காட்சிப்பொருள்கள் காட்டப்பட்டன. இதிலிருந்த காட்சிப் பொருள்களின் விலைமதிப்பு சுமார் 30.00,000 பவுனாகும். அதனை மொத்தம் 60,39,195 பார்வையாளர்கள் பார்வையிட்டனராம். இந்தக் கண்காட்சியின் மூலம் கிடைத்த வருவாயைக்கொண்டுதான், சௌத் கென்சிங்டன் (South Kensigton) என்ற இடத்தில் 87 ஏக்கர் நிலம் வாங்கி, அதில் பொருட்காட்சிசாலைகளும், ஆராய்ச்சிக் கூடங்களும், கலைக்கூடங்களும் கட்டினார்களாம் கண்காட்சியின் நிருவாகிகள்.

இலண்டன் கண்காட்சியைத் தொடர்ந்து பாரிசில் 1878-ஆம் ஆண்டிலும், 1889-ஆம் ஆண்டிலும் இரண்டு பெரிய கண்காட்சிகள் வைக்கப்பட்டன. 1893-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஒரு பெரிய கண்காட்சி திறக்கப்பட்டது. அதைப் போன்றே உலக நாடுகள் பலவற்றிலும் பெரியபெரிய கண்காட்சிகள் தொடர்ந்து திறக்கப்பட்டன.

இலண்டன் கண்காட்சிக்குப் பிறகு, குறிப்பிடத்தக்க வகையில் அமைந்த மிகப்பெரிய கண்காட்சி 1924-25 ஆம் ஆண்டில் வெம்பிளி (Wembley) என்ற இடத்தில் நடைபெற்ற பிரிட்டிச் பேரரசுக் கண்காட்சி (British Empire Exhibition) ஆகும்.

அமெரிக்கா 1933-34 ஆம் ஆண்டில் சிகாகோ நகரில், தனது ஒரு நூற்றாண்டின் அரிய அரசியல்—பொருளியல்—சமூகவியல்—தொழிலியல்—அறிவியல் சாதனைகளைக் கண்காட்சியாக நடத்திக்காட்டிற்று. அந்தக் கண்காட்சி மிக்க வியப்புக்குரிய முறையில் அமைந்திருந்தது. இந்த முறையில் அமைந்த கண்காட்சி 1935-ஆம் ஆண்டில் சான்டியாகோ, பிரேசில் போன்ற இடங்களிலும் திறக்கப்பட்டது. பிறகு டெக்சாச், சான்பிரான்சிச்கோ, பாரிச், நியூயார்க் ஆகிய நகரங்களிலும் தொடர்ந்து வைக்கப்பட்டது. இத்தகைய கண்காட்சி மக்களுக்குப் புதிய எழுச்சியையும், ஊக்கத்தையும் அளித்ததோடு, அறிவியல் துணை கொண்டு புதிது புதிதான பொருள்களைக் கண்டுபிடிப்பதற்கும், பொருளுற்பத்தியைப் பெருக்குவதற்கும், வாணிகத்தை விரிவாக்குவதற்கும் பெரிதும் பயன்பட்டது.

இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்ததற்குப் பிறகு நடந்த கண்காட்சிகளிலே மிகப் பெரிய கண்காட்சி 1951-ஆம் ஆண்டு இலண்டன்மாநகரில் நடைபெற்ற "நூற்றாண்டுக் கண்காட்சி"யாகும். அந்தக் கண்காட்சியில் பல்வேறு துறைபற்றிய பொருள் வைக்கப்பட்டு, வரலாறு கூறப்பட்டுச், செய்திகள் விளக்கப்பட்டுப், பயன்கள் கூறப்பட்டிருந்தன. உலகநாடுகள் பலவற்றிலிருந்தும் இலட்சக்கணக்கான பார்வையாளர்கள் அந்தக் கண்காட்சியைச் சென்று பார்த்தனர்.

இந்தியத் துணைக்கண்டத்தை வெள்ளையர்கள் ஆண்டுகொண்டிருந்தபோது குறிப்பிடத்தகுந்த கண்காட்சி எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இந்தியா விடுதலை பெற்ற பிறகு "இரயில்வே நூற்றாண்டுக் கண்காட்சி"யும் "அஞ்சல் கண்காட்சி"யும் குறிப்பிடத்தக்கவைகளாகும். 1952-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் நடைபெற்ற "அகில உலகக் கண்காட்சி" (International Exhibition) மிகச் சிறப்புடன் நடைபெற்ற ஒன்று ஆகும்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் கண்காட்சி இன்னமும் நல்ல முறையில் அமையவில்லை; அது பெறவேண்டிய மதிப்பைப் பெறவில்லை; அது பயன்படவேண்டிய வகையில் அமையவில்லை. கல்வியறிவில்லாதோர் நூற்றுக்கு எண்பத்திமூன்று பேர்களாக வாழும் இந்த நாட்டில் கண்காட்சியைப் போல் பயன்படுத்தக்கூடிய வேறு சிறந்த

கருவி எதுவும் இல்லை என்று சொல்லலாம். ஆனால் இங்குதான் கண்காட்சி அவ்வளவு அக்கறையோடு நிறுவப்படுவதில்லை, வெறும் பொழுதுபோக்கு 'தமாஷா'க்களுக்கும், மக்கட் கூட்டத்தை வேடிக்கை பார்ப்பதற்காகவுமே இங்கு கண்காட்சிகள் பயன்படுத்தப்படுகின் றன. கண்காட்சிகளை அமைப்பதில் இந்தியா மற்ற நாடுகளோடு போட்டிபோடத் துணிவு கொள்ளுமேயானால், நல்ல முறையில் அவற்றை நிறுவுவதற்கு வழிவகைகள் பிறக்கும்.

ஒவ்வொரு சிற்றூரிலும், பேரூரிலும், நகரங் களிலும் கண்காட்சிகளை ஏற்பாடுசெய்து பொதுமக்கள் காண புதியபுதிய கண்டுபிடிப்பு களையும், அரிய பொருள்களையும் காட்சிக்குக் கொண்டுவந்து வைக்கலாம் என்ற முறையில் ஊக்குவிக்கப்படுவார்களேயானால், மக்களில் சிலருக்காவது புதியன கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆவலும், உணர்ச்சியும் ஏற்பட்டு நாட்டில் அறிவியல் அறிவு வளர வழி பிறக்கும்.

குறைந்த அளவு பெரிய பெரிய நகரங்களி லாவது நிலையான கண்காட்சிகள் நிறுவப்பட வேண்டும். படித்தறிய பாமர மக்களுக்கு அறிவு புகட்ட அவை ஏதுக்களாக இருக்கும். மேலும் பெரிய நிலவூர்தி (லாரி) களில், நகரும் கண்காட்சிகளை அமைத்துச் சிறிய ஊர்களுக்கு அடிக்கடி கொண்டுசெல்வதன் மூலம் மக்க ளுக்கு உலகியல் அறிவை ஊட்டலாம்.

மனிதனின் அறிவு ஆராய்ச்சித் திறனும் கைத்திறனும், மெய்த்திறனும் உண்டா கும் அரிய பொருள்களையும், அவற்றின் பண் புகளையும் வரலாறுகளையும் கண்காட்சிசாலை யில் வைத்து அறிந்துகொள்வதன்மூலம் பெறும் அறிவைக்கொண்டு மேலும் மேலும் நாட்டின் நிலையையும், மக்களின் வாழ்வையும் உயர்த்தலாம்.

கண்காட்சிக்கு வேண்டிய இன்றியமையாத பண்பு கவர்ச்சியாகும். அந்தக் கவர்ச்சியோடு வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களையும் சேர்த்துக் குழைத்துக் கொடுத்தால், மனித சமூகம் உறுதியாகப் பயன்பெற்றே தீரும். கருத்தும் கவர்ச்சியும் மிக்க கண்காட்சிகள் நாடெங்கும் பொலிவுபெறுமாக.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

அறிவுரை

நல்ல வெய்யிலில் பையன் தெருவில் நின்று பட்டம் விட்டு விளையாடிக்கொண்டிருந் ததை, வீட்டுத் திண்ணையில் சந்தனம் பூசி ஓய்வுடன் உட்கார்ந்திருந்த அவனது மாமா பார்த்து அவனைக் கண்டிக்க எண்ணி உரத்த குரலில் கூப்பிட்டார். பையனும் வந்தான். அவனைக் கண் டிப்பதைவிட அறிவு வரும்படியாக ஏதேனும் கூறவேண்டும் என்று எண்ணியவராய்,

" விடுதலை வீரனான ஜார்ஜ் வாஷிங்டன் உன்னைப்போன்ற பையனாக இருக்கும்பொழுது கஷ்டப்பட்டு வேலைசெய்து சம்பளம் பெற்று வாழ்க்கை நடத்தினான். நீயோ........" என்று கூறுகையில் இடைமறித்து, சிறுவன்,

" உண்மைதான். ஆனால் தங்களைப்போன்ற வயதடைந்தபொழுது அவர் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியாக இருந்தாராமே......!! என்று கூறித் தெருவில் குதித்தோடினான்.



(17)

இதுவரை ஆரியர்தம் வேதபுராணங்களிலும் இதிகாசங்களிலும் இந்திரனைப்பற்றி வருகிற கதைகளைக் கவனித்தோம். இனி வேதங்களில் இந்திரனுக்குத் தரப்பட்ட முக்கியத்துவத்தையும், அவனைப் பற்றி பாடிய பாடல்களில் வெளிப்படும் சில வரலாற்று நுணுக்கங்களையும் கவனிக்கலாம்.

பண்டைக்காலத்து ஆரியர்களிடை—அதாவது வேதகாலத்து ஆரியரிடை இந்திரன் தான் மிக மேலான, முக்கியமான கடவுளாகப் பாவிக்கப்பட்டான். சிவன், விஷ்ணு, சுப்பிரமணியர் போன்ற கடவுளர்கள் அக்காலத்தில் இந்திரன் அளவுக்கு ஏத்தித் தொழப்படவில்லை. இருக்கு வேதத்தில் காணப்படும் ஸ்தோத்திரப் பாடல்களில் பெரும்பாலானவை இந்திரனை நோக்கிப் பாடப்பட்டவைகளாகும்.

வேதகாலத்து ஆரியர்கள் ஆடுமாடு மேய்ப்பவராய், நிலையான ஊர்களில் இல்லாமல் நாடோடிகளாய், உணவு உடை இவைகளுக்கு அலைந்து திரிபவர்களாய் இருந்தனர். அவர்களுடைய ஏழ்மை நிலையும், நாடோடி வாழ்க்கையும் அவர்களுடையப் பிரார்த்தனை பாடல்களைக் கவனித்தாலே தெரியும். பிரார்த்தனையென்பது தான் விரும்புகிற பொருள்களைப் பணிவாகக் கேட்பதாகும். விரும்புகிறது என்றால் அவன் விரும்புவது ஆயிரமிருக்கலாம் ஆனாலும் தன் நிலைமைக்கு ஏற்ற, தனது நிலைமைக்கு அருகிலுள்ளதைத்தான் பிரார்த்தனையில் கேட்பான்.

உதாரணமாக ஒரு பிள்ளையார் கோயில்முன்னால் நின்று பார்த்தால் படிக்கும் மாணவன் தான் பரிட்சையில் தேறவேண்டுமெனவும், பத்தணா கூலி சம்பாதிப்பவன் தனக்கு பன்னிரண்டணா, அல்லது பதினைங்கணா கூலி கிடைக்காதாவெனவும், பத்துவேலி நிலமுடையவன் இன்னும் ஒரு வேலி நிலம் சேராதாவெனவும், பத்துக்கோடி ரூபாய் முதலுடைய கோடீசுவரன் இன்னும் இரண்டுகோடி பணம் சேர்த்துவராதாவெனவும் பிரார்த்தனை செய்வதைப் பார்க்கிறோம். பத்தணா வேலை செய்பவனுக்கு, ஒரு வேலி நிலம் கிடைப்பதென்றால் வேண்டாமெனவாப் போய்விடுவான்! அல்லது பத்துவேலி நிலமுடையவனுக்கு ஒரு கோடிரூபாய் புதையல் கிடைத்தால் ஒருவேலி நிலம் போதுமென ஒதுங்கிவிடுவதில்லை! ஆனாலும் பிரார்த்திக்கும் பொழுது தனது நிலைக்குச் சற்று மேலான, தனது நிலையிலிருந்து நினைக்கக்கூடிய பொருள்களைத்தான் பக்தர்கள் கேட்டிடக் காண்கிறோம், ஒருவனுடைய பிரார்த்தனை என்னவென்று பார்த்தால், அவனுடைய ஏழ்மை நிலைமையும், பஞ்சத்தன்மையும், அல்லது ஆடம்பர நிலைமையும் பணப்பித்தும் தெரிந்துவிடும்.

வேதகாலத்து ஆரியர்கள் ஆடுமாடுகளை மேய்த்த நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்களாதலால், அவர்களுடைய கடவுள் பிரார்த்தனையில், ஆடுமாடுகளைப் பற்றிய கவலையும், நாடோடி வாழ்க்கையில் குறுக்கிடும் தடைகளைப்பற்றிய நினைவும் மிகுந்து காணப்பட்டன. உதாரணமாக ரிக் வேத முதல் மண்டலம் 42-ம் பகுதியில் ஆரியர்கள பின்வருமாறு பிரார்த்தனை செய்கின்றனர் :

"ஓ பூஷனே! எங்களுடைய பாதைகளைச் சுருக்கச் செய்! வழியில் வரும் தடைகளை அகற்று!

எங்களுடைய கூட்டத்தினுடன் கூடி, நீ எங்களுக்கு முதலில் சென்று வழிகாட்டு!

எங்களுக்குத் துன்பம் தருவதற்காக வழியில் ஒளிந்திருக்கும் பொல்லாத ஓநாய்களைத் துரத்து!

திருட்டு எண்ணத்துடன் கொள்ளைக்காரர்கள் நாங்கள் செல்லும் வழியில் ஒளிந்திருப்பார்கள்! அவர்களை அந்த இடங்களிலிருந்து விரட்டி ஓடச் செய்!

எங்களுக்குச் செல்வத்தை உண்டாகச் செய்! புல் மிகுதியாக இருக்கிற மேய்ச்சல் நிலங்களுக்கு எங்களை அழைத்துச்செல் ; நாங்கள் செல்லும் வழியில் வெய்யல் கொடுமை இல்லாமல் செய்!

எம்மிடம் கருணை உள்ளவனே! எங்களுக்கு வயிறு நிறைய உணவு கொடு! எமது உடம்புக்குப் பலத்தைக் கொடு!"

இந்தப் பிரார்த்தனையிலிருந்து என்ன தெரிகிறது? வேதகாலத்து ஆரியர்கள் நாடோடிகளாக இருந்தனர், ஆடுமாடுகளை மேய்த்தனர், ஓநாய்க்கும் கொள்ளைக்காரர்களுக்கும் அஞ்சியபடி இருந்தனர். ஆடுமாடுகளுக்காகப் புல் நிறைந்த மேய்ச்சல் நிலங்களைத் தேடி அலைந்தனர். அவர்களுக்கு வயிறு நிரம்ப உணவு கிடைக்காமல் அல்லற்பட்டனர் என்பதும் தெரியவருகின்றது. அதனால்தான் தாம் செலுத்தும் பிரார்த்தனையில் ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் நிலத்தை வேண்டியும், தமக்கு வயிறார உணவு வேண்டியும் பாடியுள்ளனர். பசியுள்ள குழந்தைதானே "அம்மா! சோறு!" என்று கூப்பாடு போடும். அதைப்போல, உணவின்றி அலைந்து திரிந்த ஆரியர்கள் 'வயிறார உணவு' வேண்டிக் கடவுளைப் பிரார்த்தித்தனர்.

ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு, கள்ளர்களுக்கும் ஓநாய்களுக்கும் பயந்துகொண்டு, புல்வெளிகளைத் தேடி வெய்யல் மழையில் அடிபட்டு, ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தபொழுது, இங்கு நாகரிகத்தில் மிக்கோங்கியவர்களாய், நாடு நகரங்களை அமைத்து, அவற்றில் கூடங்கள், மாடங்கள் மாட்சிபெற, உல்லாசமாகவும், இன்பமாகவும் தமிழர்கள் வாழ்வதை அவர்கள் கண்டனர்.

ஆரியர்கள் ஆடுமாடுகளை மேய்த்துவந்தனர், இங்கோ தமிழர்கள் யானைமேல் ஊர்ந்து சென்றனர், குதிரை பூட்டிய அழகிய தேர்களில் விரைந்துசென்றனர்!

ஒதுங்க இடமின்றி, காற்றிலும் வெய்யலிலும் ஆரியர்கள் அவதிப்பட்டுவரும்பொழுது, அவர்கள் எதிர்ப்பட்ட நாட்டில், அழகிய நகர்களையும், அகன்ற தெருக்களையும் அவற்றையடுத்து உயர்ந்த மாடங்களையும், கூடங்களையும், அவற்றில் உல்லாசமாக, மழையைப் பற்றியோ, வெய்யலைப்பற்றியோ, ஓநாயைப் பற்றியோ, ஒளிந்திருக்கும் திருடர்களைப்பற்றியோ எவ்விதக் கவலையும் இன்றி உலவிடும் மக்களையும் கண்டனர்!

ஆரியர்களுக்கு அதுவரைத் தெரிந்ததெல்லாம் சிறு கூடாரங்கள், அதற்குமுன் மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுமாடுகள்! ஆனால் இங்கோ! கோட்டை கொத்தளங்கள், யானையும் குதிரைகளும் நிலமதிரப் பவனிவரும் காட்சி!

ஆரியர்கள் கும்பலில் ஒட்டிய வயிறு உலர்ந்த உதடுகள்! தமிழர்தம் அண்ணாந்த மாடங்களில் தேனும் பாலும் கலந்தோட கனியும் சாறும் மிகுந்திட, நடந்திடும் கேளிக்கை விளையாட்டுகள், விருந்து வேடிக்கைகள்!

ஆட்டுத்தோலைப் போர்த்துக் குளிரில் ஆரியர்கள் அவதிப்படும்பொழுது, மற்றோரிடத்தில் பட்டாடைகள் தவழ மக்கள் உலவினர்!

உடைந்துபோன மண்சட்டிகள் ; யாகக்குண்டத்துத் தீயைத் தவிர வேறெதுவும் அந்த இரவில் ஆரியர் கண்களுக்குத் துணை கிடையாது! அந்தப் 'பாழாய்ப்போன' தமிழர்கள் இல்லங்களிலோ, பொற்கலங்கள் மின்னுகின்றன! வெள்ளிச் சங்கிலியில் தொங்கிடும் விளக்கு வரிசை, மாளிகையை அழகுபடுத்துகிறது!

தமிழர்தம் செல்வநிலையும், வாழ்க்கை வளமும், நாகரிக உயர்ச்சியும் ஆரியர் உள்ளத்தில் முதலில் ஆச்சரியத்தையும், பின்பு பொறாமை பொச்சரிப்பையும், மாறாத பகைமை உணர்ச்சியையும் உண்டாக்கின. எனவே தமது கடவுட் பிரார்த்தனையில் இந்த உணர்ச்சி பல இடங்களில் காட்டப்படுகிறது. முன்னமே கூறப்பட்டபடி, வேதகால ஆரியர்களுக்கு இந்திரன் மிக முக்கியமான கடவுளாக இருந்ததனால், இந்திரனைப்பற்றிய இருக்குவேத தோத்திரப் பாடல்களில் தமிழர்களை மிகவும் தாக்கிப் பாடியிருக்கின்றனர். உதாரணமாக ரிக்வேதப் பாடல் ஒன்றில் கீழ்வருமாறு உள்ள பிரார்த்தனை இருக்கிறது.

"இந்திரனே! பகைவர்களை அழிப்பதற்கான பலவித வழிகளைத் தெரிந்தவராகிய நீங்கள், எங்கள் யாகங்களை வெறுக்கிறவர்களும், செல்வவான்களுமாக உள்ள தஸ்யூக்களை உமது வஜ்ராயுதத்தினால் கொன்றுவிடக்கடவீர்!"

இந்தப் பாடலில் என்ன தெரிகிறது! ஆ

யர்கள் செய்த யாகங்களை வெறுக்கிற தஸ்யூக்கள் என்பவர்கள் இருந்தார்கள். அவர்கள் செல்வவான்களாக இருந்தார்கள்! ஆரியர்கள் தங்கள் கடவுளான இந்திரனைக் கூப்பிட்டு அந்த செல்வவான்களாகிய தஸ்யூக்களை (தமிழர்களை) கொன்றுவிடுவீர் என்று வேண்டிக்கொண்டனர்!

பள்ளிக்கூடத்தில் ஒரு போக்கிரிப் பையன் இருந்தானாம். அவன் மற்ற பையன்களுடைய பலகை, பலப்பம், புத்தகங்கள் இவற்றைத் திருடுவதே தொழிலாகக் கொண்டவன். ஒரு நாள் மற்றொரு பள்ளிக்கூடத்திற்குப்போனான். அங்கும் தன் கைவேலையைக் காட்டினான். அங்கிருந்த பையன் இவனுடைய திருட்டுத் தனத்தைக் கண்டுபிடித்துவிட்டான். போக்கிரிப் பையனுடைய உருட்டல் மிரட்டல்கள் புதுப் பையனிடம் செல்லவில்லை. இருவருக்கும் கைகலப்பு நடந்தது. புதுப்பையன் போக்கிரிப் பையனை புரட்டிப் புரட்டி அடித்துவிட்டான்! போக்கிரிப் பையன் அடி தாளாமல், அழுதுகொண்டு எழுந்து "என்னை நீ அடித்துவிட்டாய்! இரு, இரு! எங்கள் அப்பாவிடம் சொல்லி உன்னை அடிக்கச் சொல்லுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனானாம்!

அதைப்போல, ஆரியர்கள் புதிதாக வந்த நாட்டில் காணப்பட்ட மக்களின் வலிவுக்கு ஆற்றாராகி, தங்களால்—அவர்களை வெல்லும் வகையறியாது, இந்திரனைக் கூப்பிட்டு, "இந்திரனே! நீதான் அவர்களை அழிக்க வேண்டும்!" என்று கூப்பாடு போடுவாரா யினர்.

வேதங்களில் தஸ்யூக்கள் என்று குறிப்பிடப்படுவது தமிழர்களையாகும். ஆடு, மாடு, கிடைத்தால் மனிதர்களையும், பலியிட்டு ஆரியர்கள் நடத்திய யாக முறைகளை தமிழர்கள் வெறுத்தார்கள் என்பதும், அவர்கள் செல்வத்தில் சிறந்து வாழ்ந்தார்களென்பதும் ரிக்வேத ஆரியர்கள் இந்திரனுக்குச் செலுத்தும் பிரார்த்தனையில் இருக்கிறது! மேலே குறிப்பிட்ட பிரார்த்தனை ரிக் வேதம் மண்டலம் 1 காண்டம் 33, மந்திரம் 4 என்பதில் இருக்கிறது! அந்த மந்திரம், வடமொழியி லுள்ளபடி அப்படியே தமிழில் கீழே தரப்படுகிறது.

"வதீர்ஹி தஸ்யும் தனினம் கனேன
ஏகஸ்ரன் னுபசாகேபி ரிந்த்ர!
தனோரதி விஷுணக்தேவ் பாயன்னயஜ்வான:
ஜனக: ப்ரேதிமீயு:

வடமொழி தெரிந்தவர்களிடம் இந்த மந்திரத்தைச் சொல்லி அர்த்தத்தைக் கேட்டால் முன் சொன்னபடி இருப்பதை அறியலாம்.

தமிழர்கள் (தஸ்யூக்கள்) மீது கொண்ட பொறாமையாலும் அடக்கமுடியாத பகையுணர்ச்சியாலும் ஆரியர்கள் இந்திரனைக் குறித்துவரும் பிரார்த்தனைப் பாடல்களில் தமிழர்களை இழிவுபடுத்தியும், தமிழர்கள் அடியோடு அழிந்துவிடவேண்டுமெனவும் வேண்டுதல் செய்துள்ளனர். ஆரியர்களுடைய கலாசாரமும் பழக்கவழக்கங்களும், தமிழர்களுடைய பண்பாடும் பழக்க வழக்கங்களும், முற்றிலும் மாறுபாடாகவும், பலவிடங்களில் ஒன்றையொன்று வெறுப்பனவாகவும் இருந்தன! தமிழர்கள் அக்காலத்தில் வலிவிலும், வாழ்விலும், மிக உயர்ந்து இருந்தமையால் ஆரியர்களைப்பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆரியர்களுக்குத் தமிழர்களின் செல்வத்தையும், அவர்தம் உயர்ந்த மாட மாளிகைகளையும், ஒழுங்கு செய்யப்பட்ட நகரங்களையும் பார்க்குந்தோறும் பொறாமைத்தீ அவர்தம் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியத்தொடங்கியது. மற்றொரு பாடலில் ஆரியர்கள் இந்திரனுக்குத் தரும் வேண்டுகோளைப் பாருங்கள்!

"இந்திரனே! கீகட நாட்டில் பசுமாடுகள் தேவரீரின் பொருட்டுப் பாலைத் தராமலும், நாங்கள் நடத்தும் யாகங்களுக்கு உதவாமலும் இருக்கின்றன. ஆகையால் அவைகளைக் கொள்ளையடித்து எங்களுக்குத் தாருங்கள்! மேலும், அந்தக் கீகடதேசத்தை அரசுபுரியும் பரமகந்தனுடையவும் அவனுடைய பிள்ளை பேரன் முதலிய எல்லோருடையவும் பொருள்களைக் கொள்ளையடித்து எங்களுக்குத் தந்து காப்பாற்றுங்கள்!"

இந்த மந்திரம் வேதங்களைச் சார்ந்த நிருக்தம் கைகமகாண்டம் 32-ல் வருகிறது!

தங்கள் கடவுளாகிய இந்திரனைப் பார்த்து ஆரியர்கள் செய்யும் பிரார்த்தனை எப்படிப் பட்டதாகயிருக்கிறது! மேலே சொல்லப்பட்ட 'கீகடநாடு' என்பது ஆரிய வேதங்களில் அனாரிய தேசங்களில் ஒன்று என்று குறிக்கப்படுகிறது. அனாரிய தேசம் என்றால் ஆரியரல்லாதாரின் நாடு! அதாவது தஸ்யூக்கள், தமிழர்கள் இவர்களின் நாடு! ஆடுமாடுகளையே செல்வமாகக்கொண்ட ஆரியர்களுக்கு, தமிழர்களின் நாட்டில் ஏராளமான பசுக்கூட்டங்கள் இருப்பது மனப்புழுக்கத்தைத் தருகிறது. அங்குள்ள அரசனும், அவனுடைய சுற்றத்தாரும், நாட்டு மக்களும் அளவற்ற செல்வத்

தைப் பெற்றிருப்பதும் ஆரியர்களுடைய பொறாமையை வளர்த்துவிட்டது. உடனே தங்கள் கடவுளான இந்திரனைப் பார்த்து "அந்தப் பசுமாடுகளையும், அரசனுடைய பொருள்களையும் கொள்ளையடித்துத் தாருங்கள்!" என்று கேட்கின்றனர். அதைப்போல எங்களுக்குப் பசுக்கூட்டங்களும், செல்வமும் வேண்டும் என்று கூடக் கேட்கவில்லை அவற்றையெல்லாம் கொள்ளையடித்து எங்களுக்குத்தாரும் என்று கடவுளைக் கேட்கிறார்கள். கொள்ளையடிக்கப் பலதடவை முயன்று, அதில் முடியவில்லை என்றபின்தான் இத்தகைய வேண்டுதல்கள் வந்திருக்கவேண்டும், தன்னால் முடியாததைத் தன் கடவுளாவது செய்யட்டும் என்று!

ஆரியர்களுக்கு தமிழர் வாழ்வதேப் பிடிக்கவில்லை. மற்றொரு தோத்திரப்பாடலில் "இந்திரனே! யதுதானர்களின் ஆண்களையும், பெண்களையும் அழித்துவிடுங்கள்!" என்று வேண்டிக்கொள்ளுகிறார்கள். யதுதானர் என்பது அரக்கர்கள், அனாரியர்கள் இவர்களைக் குறிப்பதாகும். தமிழர்களின் பசுக்கூட்டங்களையும், அளவற்ற செல்வங்களையும் கொள்ளையிடுவது மட்டுமல்ல, அவர்களை ஆண், பெண் உள்பட எல்லோரையும் அழித்துவிடவும் அவர்கள் விரும்பியிருக்கின்றனர்; முயன்றுமிருக்கவேண்டும். அடங்காத விருப்பம், முடியாத முயற்சி பிரார்த்தனையாக, கடவுள் தோத்திரமாக வருகிறது.

ஒரு நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புகளை அவர்கள் கொண்டாடும் கடவுள்களும் மேற்கொண்டிருக்கும், ஆட்டிறைச்சி சாப்பிடுபவர்களின் கடவுளுக்கு ஆட்டுக்கறிதான் பிடிக்கும். பன்றிக்கறி பிடிக்காது. அதைப்போல பன்றிக்கறி சாப்பிடுபவர்களின் கடவுள் பன்றிக்கறியைத்தவிர வேறெதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார். கள் சாப்பிடுபவரின் கடவுள் கள்ளைச் சாப்பிடும். பட்டுத்துணியில் விருப்பமுள்ளவரின் கடவுள் பட்டுத் துணி உடுத்தியிருக்கும். கம்பளி ஆடை வேண்டியவர்களின் கடவுள் கம்பளி ஆடை போர்த்தியிருக்கும். அதைப்போல ஒரு நாட்டு மக்களின் எதிரிகளும், அந்த நாட்டுக் கடவுள்களுக்கும் எதிரிகளாகிவிடுவார்கள். இரண்டு நாட்டுக்கும் சண்டைவந்தால், கடவுள் தனதுநாட்டு மக்களுக்காகப் போராடுவார். தங்கள் நாட்டு வரலாற்றை எழுதும்போதும், எதிரி நாடுகளின்மீது போட்ட சண்டைகளைப்பற்றி எழுதுவதுபோல, தங்கள் கடவுள் புராணங்களை எழுதும்பொழுது, எதிரிகள்மீது தங்கள் கடவுள் படையெடுத்துச் சென்றதாக எழுதிவிடுவார்கள். கடவுளானதால் அவர் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவார், அவர் நடத்தும் சண்டைகளில்!

ஆரியருக்கும், தமிழருக்கும் நடைபெற்ற போராட்டத்தில் தமிழர்தம் வலிவிற்கு ஆரியர் ஆற்றாராயினும், பின் அடுத்துக் கெடுத்தல், போன்ற சூழ்ச்சி துணைக்கொண்டே நாட்டினுள் புகமுடிந்தது. தமிழர்மீது ஆரியர் பகைமை கொண்டிருந்ததால், ஆரியர்களின் கடவுளான இந்திரனும் தமிழர்களைத் தனது எதிரியாகப் பாவித்தான். தமிழர் (தஸ்யுக்கள்) மீது இந்திரன் பல போர்கள் நடத்தியதாக வேதபுராணங்களில் ஆரியர்கள் எழுதி மகிழ்ந்தனர். இந்திரன் அவர்களுடைய கடவுளானதால், அவர்களால் அடையமுடியாத பல வெற்றிகளை இந்திரன் அடைந்துவிட்டான், புராணக் கதைகளில்!

ரிக் வேதத்தில் வரும் கீழிரண்டு சுலோகங்களையும் பாருங்கள்!

"இந்திரனே! தேவரீர் திவோதாடை அரசனிடம் வைத்த அன்பினால் சம்பரன் என்ற தஸ்யு அரசனின், கற்களால் கட்டப்பட்ட மாளிகைகளையுடைய பட்டணங்களை அழித்துவிட்டீர்!"—(ரிக் வேதம் மண்டலம் 4, காண்டம் 30, மந்திரம் 20).

"இந்திரனே! தேவரீர் தபீதி என்ற அரசனிடம் வைத்த கருணையால் முப்பதினாயிரம் தஸ்யுக்களை வஞ்சனை செய்து பலவகை உபாயங்களால் கொன்றுவிட்டீர்!" (ரிக் வேதம் மண்டலம் 4, காண்டம் 30, மந்திரம் 21),

"இந்திரனே! தேவரீர் பக்கதுணைகளுடன் சென்றாலும், செல்வத்தில் மிக்க தஸ்யுக்களைத் தனியே உங்கள் வஜ்ராயுததால் கொன்றுவிட்டீர்கள்?"—(ரிக்வேதம் மண்டலம் 1, காண்டம் 1 மந்திரம் 33).

தஸ்யூக்கள் என்றழைக்கப்பட்ட பண்டைத் தமிழர் கற்களால் கட்டப்பட்ட மாளிகைகள் நிறைந்த பட்டணங்களில் வாழ்ந்தனரென்பதும், செல்வத்தில் மிக்கவர்களாய் இருந்தனரென்பதும், அவர்களை வெல்வதற்கு வஞ்சக வழிகளே மிக உதவியாக இருந்தனவென்பதும் மேற்கண்ட மூன்று மந்திரங்களிலிருந்தும் பெறப்படுகின்றன. கற்களாலாகிய மாளிகைகளையும், அலைவநிறைந்த பட்டணங்களையும் கண்டு ஆரியர்கள் ஆச்சரியமும், பொருமையும் பெற்றிருக்கிறார்கள். காரணமென்னவென்றால், அவர்கள் நாடோடி வாழ்க்கையினராய் குகைகளிலும் சிறு கூடாரங்களிலும் மட்டும் வாழ்ந்திருந்ததால்!

(தொடரும்)

காணிக்கை!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வன : இவ்வளவையும் யோசித்துதான் செய்தாயா? அல்லது செய்தபின் யோசித்துக் கொண்டிருக்கிறாயா? நீ கட்டைவிரலை அறுத்துக்கொடுக்கும்பொழுது, அவர்களுடைய சூழ்ச்சியில் வீழ்ந்துவிட்டாய் என்றுதான் நினைத்தேன்!

ஏக : அவர்கள் செய்த சூழ்ச்சியில் நான்தான் வெற்றிபெற்றேன். நீ அழுது புலம்பிக் கொண்டிருந்ததால், சரியாகக் கவனிக்கவில்லை. கட்டைவிரலை அறுத்தபொழுது என் கையில் ஏற்பட்ட வேதனையைவிடத் துரோணர் முகத்தில் காணப்பட்ட வேதனை அதிகம்! கட்டைவிரலைக் காணிக்கையாக நான் சமர்ப்பித்தபொழுது, நான் புன்னகையுடனிருந்திருந்தேன்; அவர் திகைப்பால் மயங்கி விழும் நிலையடைந்தார்! சூழ்ச்சியில் அவர்கள் வெற்றிபெற்றார்களென்றால், வெற்றி பெறும் நேரத்தில் வேதனையடைவானேன்? மயங்கி விழுவானேன்? வேதனையும், மனமயக்கமும் வெற்றியின் விளைவுகளா? நிச்சயமாக இல்லை! சூழ்ச்சியில் அவர்கள் தோற்றார்கள். உண்மையில் வெற்றிபெற்றது நான்தான்! சொன்ன சொல்லைக் காப்பாற்றினேன்; அவர்களுடைய வஞ்சகத்தை உலகமறியச் செய்தேன்!

வன : சொன்ன சொல்லைக் காப்பாற்றியதெல்லாம் சரி! நான் சொல்வது, முன் பின் யோசியாமல் முதலில் சொல்லைத் தந்திருக்கவேண்டாம்; பின் வில்லையெடுக்க முடியாத நிலையில் தொல்லைப் படவும் வேண்டாம்!

ஏக : கட்டைவிரலை இழந்துவிட்டதாலேயே இனி வில்லை எடுக்கமாட்டேன் என்று நினைக்காதே! கட்டை விரலையுடைய ஏகலைவன் பகைவர்களுக்கு எவ்வளவு கிலி மூட்டினானோ, அவ்வளவு கிலி கட்டைவிரலையிழந்த ஏகலைவனாலும் உண்டாக்க முடியும்!

வன ; எப்படி, எப்படி?

ஏக : காலிழந்த நொண்டி, நமக்குக் கால் போய் விட்டது இனி நடமாட முடியாது என்று பேசாமல் ஓரிடத்திலேயே உட்கார்ந்து விடுகிறானா? கிடையாது! எப்படியும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகவேண்டுமென்ற விருப்பம், அவனைப் பிடித்துத் தள்ள, உருண்டு புரண்டாவது போய்க்கொண்டிருப்பான். நடமாடுவதற்கு உதவியாக இருப்பது அவனது கால். ஆனால் நடமாடவேண்டுமென்ற விருப்பம் அவன் உள்ளத்திலிருந்து வருகிறது. அவனது உள்ளத்தில் நடமாடவேண்டுமென்ற விருப்பம் இருக்கிறவரை, அவன் காலைக் குறைத்தாலும், ஒடித்தாலும் நடமாட முயன்றபடிதான் இருப்பான். அதைப்போல, என் வில்வித்தை என் கட்டைவிரலிலிருந்து மட்டுமல்ல, என் உள்ளத்திலிருந்து பிறக்கிறது. என் வில்வித்தையை அழித்துவிடக் கட்டை விரலை மட்டும் அழித்தால் போதாது, என் உள்ளத்தையும் அழித்தாகவேண்டும்! ஆக என் உயிர் இருக்கும்வரை, என் உள்ளத்தில் உணர்வு இருக்கும் வரை, என் வில்வித்தையை எவராலும் அழிக்கமுடியாது!

வன : போகலாம், வா! அதோ! கடும்பகல் வெய்யலில், வெட்டப்பட்ட உன் கட்டைவிரல் மண்ணில் கிடக்கிறது! இன்னும் இரண்டொரு நாட்களில் மண்ணில் புதைந்து மறைந்துவிடும்! அல்லது எலியோ பூனையோ தனது ஒருவேளை உணவுக்கு இழுத்துச் செல்லும்! வேடிக்கைதான்! இரண்டு நாழிகைக்குமுன் வெறிகொண்ட வேங்கையையும், வீறிட்டு வரும் சிங்கத்தையும் பயந்தோடச்செய்த கட்டைவிரல், இப்பொழுது எலிக்கும் பூனைக்கும் இரையாகப்போகிறது!

(போகிறான். திரை விழுகிறது.)

ஐந்தாவது காட்சி

(துரோணரைத் தாங்கிக்கொண்டு, அருச்சுனன் நிற்கிறான். அசுவத்தாமா, கர்ணன் முதலானவர்கள் வருகிறார்கள்,)

அசு : அப்பாவுக்கு என்ன? மூர்ச்சையாகிப் போய்விட்டாரே! காட்டுக்கு வரும்பொழுதே தெரியும் ஏதாவது: புலி, கிலி கண்டு பயமுறுத்துமென்று.

கர்ணன் : எப்படிக் குருநாதர் மூர்ச்சையானார்? களைப்பு மிகுதியா அல்லது மனக்கலக்கத்தினால் மயக்கமடைந்தாரா?

(துரோணரின் முகத்தில் அருச்சுனன் தண்ணீர் தெளிக்கிறான்.)

துரோ : (மூர்ச்சை தெளிந்து) எங்கிருக்கிறேன் நான்? ஏன் இவ்வளவு சத்தம்? இவை என் கைகள்தானா? (திகைப்புடன்) இந்த இரத்தம்! (வெறிப்புடன் பார்த்து) ஏகலைவனின் கட்டைவிரல்! (கையைப் பார்த்து) இரத்தம்! இரத்தம்! ஐயோ? (கண்ணை மூடிக்கொள்கிறார்.)

அரு : குருவே! கையில் பட்ட இரத்தத்தைப் பற்றி அவ்வளவு கவலைப்படுவானேன்? வாருங்கள் போகலாம்! அருகிலுள்ள கங்கையாற்றில் கையைக் கழுவிவிடலாம்!

துரோ : இல்லையில்லை! கங்கை நதியில் ஓடும் தண்ணீர் முழுவதும் இந்தக் கையை நனைத்துச் சென்றாலும், அதில் பட்டுள்ள இரத்தக் கறையைப் போக்காது! ஏழு சமுத்திரங்களின் தண்ணீரும் என் கையைச் சுத்தமாக்கமுடியாது! பதிலாக இந்தக் கையை நனைத்தால், கங்கை நதியும், ஏழு சமுத்திரங்களும் இரத்த நிறமாக மாறிவிடும்! இரத்தம்! இரத்தம்! (கையைப் பார்த்துக்கொண்டே துரோணர் மயங்கி விழுகிறார்.)

ஆறாவது காட்சி

(பாரதப்போர். குருக்ஷேத்திர யுத்தகளத்தில் ஒருபுறம். கூடாரத்தின் முன். துரோணர் அமர்ந்திருக்கிறார். அவருக்கு முன் சதுரங்கக்காய்கள் வைக்கப்பட்டுள்ளன. கர்ணன் உள் நுழைகிறான்.)

கர் : துரோணாச்சாரியாரே! இங்குதான் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்களா? வெளியில் அகோர யுத்தம் நடைபெறுகிறது! பரதகண்டத்திலுள்ள வீரர்களனைவரும் தம் சேனைபலத்துடன் இங்கு இரண்டாகப் பிரிந்து போராடுகிறார்கள்! அக்குரோணிக் கணக்கில் சேனைகளும், பல்லாயிரத்துக்கு மேற்பட்ட யானைகளும், எண்ணமுடியாத குதிரைகளும், எங்குபார்த்தாலும் நகர்ந்துவரும் தேர்களும் இந்த யுத்த பூமியில் மொய்த்துக் கிடக்கின்றன! இரண்டு சேனை சமுத்திரங்களும், அலையலையாக எழுந்து ஒன்றையொன்று தாக்கிக்கொள்ளுகின்றன! மண்டையோடுகளும், எலும்புத் துண்டுகளும் குன்றுபோல ஆங்காங்குக் குவிந்துகிடக்கின்றன! அந்தக் குன்றுகளிடை பாய்ந்துவரும் நதிகளைப்போல ரத்தப்பிரவாகம் புரண்டுவருகிறது! வீரர்களின் சங்கநாதமும், மதயானைகளின் கதறல்களும், குதிரைகளின் ஓட்டமும், தேர்களின் முறிவும் யுத்தகளத்தைக் கிடுகிடுக்கச் செய்கின்றன! ஊழிக்காலத்து ஏற்படுவதைப் போல பயங்கரச் சத்தம் வெளியில் கேட்கும்பொழுது, நீங்கள் மட்டும் அமைதியாக இங்கு எப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்? சதுரங்கம் ஆடுவதற்குச் சமயம் இதுதானா?

துரோ : (எழுந்துவந்து) கர்ணா! இத்தகைய சதுரங்கத்தினால்தான் பாரதப்போர் மூண்டது! நாளையதினம் கௌரவ சேனையை எப்படி வகுக்கலாம்? மகரயூகமாக வகுக்கலாமா? சக்ரயூகமாக வகுக்கலாமா? என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். பாண்டவ சேனை எப்படி வகுக்கப்படும் என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்!

கர்ணன் : இன்றைய தினம் அமைக்கப்பட்ட அணிவகுப்பில் நான் வலது கோடியில் இருந்தேன். அருச்சுனன் எதிர்ப்புறத்தில் மற்றொரு கோடியில் இருந்தான்! பாண்டவப் படைவரிசையைப் பிளந்துகொண்டு போகுமுன், அருச்சுனன் அந்த இடத்தைவிட்டு மாறிவிட்டான். அதற்குள் என்னை எதிர்த்து விராடனும், நகுலனும் வந்தார்கள். அவர்களுடன் போரிடும்பொழுது, சல்லியனும் அருச்சுனனும் போரிட்டனர். பார்த்திபனுக்குத் தேரைச் செலுத்த கிருஷ்ணன் இருக்கிறார். இலக்கு பார்த்து, மிகுந்த யோசனையுடன் அவர் தேரைத் திருப்பி அருச்சுனனுக்கு வெற்றிகிடைக்கச் செய்கிறார். நேராக நானும் அவனும் தொடர்ந்து போரிடும்

சமயம் சரியாக்க் கிடைக்கமாட்டேன் கிறது!

துரோ: அங்க தேசாதிபனே! பாண்டவ சேனைக்கு வில்வீரனுக பார்த்திபன் எப்படியிருக்கிருனே, அப்படி நீ கௌரவ சேனைகளுக்கு இருக்கிருய்!

கர்: ஆனுல் அணிவகுப்பு அமைக்கப்படும் பொழுது, தூரத்தில் நான் சிக்கிக்கொள்ளுகிறேன்! எதிர்ப்பில்லாத சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அருச்சுனன் மறுபக்கத்தைப் பிளந்து, கௌரவ சேனைகளை அதம் செய்யத்தொடங்குகிருன்!

துரோ: வில்வித்தையில் அருச்சுனன் வல்லவன்! சாமான்யர்களால் அவனை எதிர்த்து நிற்கமுடியுமா? அபாரக் கலைஞானம் அவனுக்குண்டு, ஆனுல் அந்த அளவுக்கு அவனை ஆக்கிவிட்டது நான்தான்!

கர்: ஆமாம்! அன்று குருகுலவாசத்தில் அருச்சுனனை மட்டும் தனியாகப் பிரித்து எல்லா வித்தைகளையும் கற்றுக்கொடுத்தீர்கள்! அருச்சுனன் உங்கள் பக்கத்தில் இருக்கும்வரை வேறெவரும் வில்வித்தையைக் கற்றுக்கொள்ளமுடியாது என்று தெரிந்துகொண்ட நான் பரசுராமரிடம் போய் வில்வித்தை பயின்றேன்! நீர் அருச்சுனனை மட்டும் சிறந்த வில்வீரனுக ஆக்கினீர்கள்! அதன் பலன், கற்ற வித்தையை குருவிடமே அவன் காட்டுகிருன் இந்த யுத்தத்தில்!

துரோ: மோசம்போனேன்! ஆனுல் இத்தகைய பாரதப்போர் மூளுமென்று யாருக்குத் தெரியும்! அதுவும் இந்த அந்திய காலத்தில் போர்க்கோலத்தில், யுத்தகளத்தில், என் சீடர்களையும், சிநேகிதர்களையும் எதிர்த்து நிற்போமென்று நினைத்தேன்? எனது சீடர்களும் பரத கண்டத்துப் பல்வேறு தேசத்தில் அரசர்களாகிவிடுவார்கள், ஒரு நாளைக்கு அஸ்தினுபுரத்தில், ஒரு நாளைக்கு இந்திர பிரஸ்தத்தில், ஒரு மாதம் விராடதேசத்தில், மற்ருெரு சமயம் விதுரர் மாளிகையில் இப்படிக் காலங்கழிக்கலாம், என்றுதான் கணக்கிட்டேன்! ஓய்வுபெற்று நிம்மதியாக இருக்கவேண்டிய அந்திய காலத்தில், போர்க்களத்தில் சேனைகளின் மத்தியில் இருக்கவேண்டியிருக்கிறது. அதிலும் என் பிரதம சீடனை வில்வீரனை எதிர்த்துக்கொண்டு!

கர்: நீங்கள் கருணை புரிந்திருந்தால், மற்றும் எவ்வளவோ பேர் உங்கள் சீடர்களாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அருச்சுனனைவிடச் சிறந்த வில்வீரர்களாக அவர்கள் ஆகியிருப்பார்கள்! உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? சீடனுகத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி ஒருவன் உங்களிடம் வந்தான். அருச்சுனன் சொல்லைக் கேட்டு அவனை விரட்டியடித்தீர்கள்! நீங்கள் அவனைச் சீடனுக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவன் உங்களையேக் குருவாகப் பாவித்து வில்வித்தை கற்ருன்! ஆனுல் அவன் அருச்சுனனைவிட வில்வித்தையில் சிறந்தவனுக இருந்தான் என்பதற்காக அவன் கட்டைவிரலைக் காணிக்கையாக வாங்கிவிட்டீர்கள்!

துரோ; ஐயோ! கர்ணு! எனக்குள்ள மனவேதனை போதாதென்று அதையும் ஞாபகப்படுத்துகிருயா? (கையைப் பார்த்து) இரத்தம்! இரத்தம்! அன்று அவன் காணிக்கை தந்தபொழுது, கையில் பட்ட சிறு இரத்தக்கறை; அது இன்னமும் போகவில்லைபோலிருக்கிறது. தண்ணீரால் கழுவமுடியாத கறை; கஸ்தூரி, சந்தனம் போன்றவைகளால் மாற்றமுடியாத நாற்றம்! இந்தப் பாரதப் போரில் வீரர்களின் கைகால்கள் வெருக்கப்படுவதைப் பார்க்கிறேன். தலைகள் அறுந்து விழுவதைப் பார்க்கிறேன்! இவைகளை இழுத்துக்கொண்டு, இரத்த வெள்ளம் ஓடுவதையும் பார்க்கிறேன்! இவையெல்லாம் எனக்குக் கலக்கத்தை உண்டாக்கவில்லை. ஆனுல் அன்று அறுந்த கட்டைவிரல், அதிலிருந்து சிந்திய சிறு துளி இரத்தம்; அந்தக் காட்சி என் உள்ளத்தைக் கலக்கிவிட்டது! என் உறக்கத்தைக் கெடுக்குமளவுக்கு வளர்ந்துவிட்டது!

கர்: அந்த ஏகலைவனை நமக்கு உதவியாக நான் அழைத்திருக்கிறேன்! இன்றைக்கு அவசியம் வந்துவிடுவான்!

துரோ: ஏகலைவன்? உதவியாகவா? அவன் வந்து என்ன செய்யமுடியும்? எதிரில் நிற்பதால் என் மனவேதனையைத்தான் அதிகப்படுத்தமுடியும்! கட்டைவிரலை மட்டும் வாங்காதிருந்தால், கட்டைவிரலையிழவாத ஏகலைவன், கௌரவ சேனைகளுக்கு நல்ல பக்கபலமாக இருந்திருப்பான்! நான் அன்று செய்தது இன்று நமக்குப் பாதகமாகவே முடிந்தது! வேண்

டாம், கர்ணு! ஏகலைவனை அழைத்து வராதே! மற்றவர் வீசும் அம்புகளைவிட கட்டைவிரலை இழந்தவன் வீசும் பார்வை அம்புகள் என் மனதில் தாங்கமுடியாத புண்ணை உண்டாக்கும்! அந்திய காலத்தில் சற்று அமைதியுடனாவது நான் இறக்கிறேன்!

கர் : ஹே! துரோணாச்சாரியாரே! வில்வீரன் ஏகலைவனுக்கு நீர் செய்த தீங்கு மிகப் பெரிது! அவன் காட்டுமிராண்டியாக இருந்தாலும், நம்மைவிடக் கண்ணியம் உள்ளவன்! நமக்கு ஆபத்தான நேரத்தில் உதவிசெய்யத் தவறமாட்டான்! நிஷாத புரத்து வில்வீரர்கள் துணைவந்தால் கௌரவ சேனைகளுக்கு நல்ல பலம் தானே! அதோ! ஏகலைவனும் வருகிறான்! (துரோணர் திடுக்கிட்டுச் சற்று எட்டிப்போய் நிற்கிறார். ஏகலைவனும் வனதத்தனும் வருகிறார்கள்.)

ஏக : வணக்கம், கர்ணு! நானும் என் நண்பனும் காட்டில் வெகுதூரம் உள் சென்றிருந்தோம்! அதனால் உன் அழைப்பு வந்தவுடன் புறப்பட்டுவர முடியவில்லை! சேனையின் பலாபலங்கள் எப்படி இருக்கின்றன? என்னுடன்வேடர்குல வில்வீரர்கள் அனைவரும் அணிவகுத்து வந்துள்ளனர்! (துரோணாச்சாரியார் தூர நிற்பதைப் பார்த்து) துரோணாச்சாரியார் இங்கு எப்படி வந்தார்? அருச்சுனன் பக்கமல்லவா அவர் இருந்திருக்கவேண்டும்! வில்வித்தையின் குருவே! எனது வணக்கம்!

வன : வில் வீரர்களின் கட்டைவிரலை வாங்கிடும் கருணாமூர்த்தியே! வணக்கம்!

துரோ : வேதனைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்! மேலும் என்னை வேடிக்கை பேசித் தாக்காதீர்கள்! ஏகலைவா! என்னை மன்னித்துவிடு! உனக்கு மாபாதகம் செய்துவிட்டேன்! கட்டைவிரலைக் காணிக்கையாக வாங்கி, உன் வில்வீரத்தை அழித்துவிட்டேன்! அதுவும் நானாகச் செய்யவில்லை, அருச்சுனனுக்காகச் செய்தேன்!

வன : அன்று சொன்னார் 'நானாகக் காணிக்கை கேட்கவில்லை! ஏகலைவன் தானாக வந்து காலடியில் விழுந்து வணங்கிக் காணிக்கை பெற்றுப்போகும்படி வேண்டினான். அதனால் கேட்டேன்' என்று. இன்று 'நானாகக் காணிக்கை கேட்கவில்லை, அருச்சுனன் வேண்டிக்கொண்டதால் செய்தேன்' என்கிறார். இவர் தானாக எதுவும் செய்வது கிடையாது போலிருக்கிறது. எல்லாம் மற்றவர்கள் செய்யச் சொல்வதால்தான்!

ஏக : குருவே! எது எப்படியிருப்பினும், என் கட்டைவிரலை நீங்கள் கேட்டதும் உண்மை, நான் அதைக் காணிக்கையாகக் கொடுத்தும் உண்மை! கட்டைவிரல் போனால் என் வில்வித்தை அழிந்துவிடுமென்று நினைத்தீர்களே, அது தவறு என்று நிரூபிக்கவே இந்தக் குருக்ஷேத்திர யுத்தத்தில் கலந்துகொள்ள வந்தேன்! (வில்லை வளைத்து, நாணேற்றி, ஒரு அம்பை விடுகிறான்.)

துரோ : (ஆச்சரியத்துடன் ஏகலைவன் கையைப்பற்றி) என்ன, கட்டைவிரல் இருக்கிறதே! எப்படி வந்தது? தவம் செய்து வரம் வாங்கினாயா? அல்லது தானாக வளர்ந்துவிட்டதா?

வன : ஏகலைவனால் எப்படித் தவஞ்செய்து வரம்பெறமுடியும்? அவன் வேடன், சூத்திரன்! அவனது குலத்தொழில் என்ன, குலதர்மம் என்ன? அதைவிட்டுப் பிராமணோத்தமர்களின் தொழிலான தவத்திற்கு வரலாமா? வந்தால்தான் ராஜயாதிகாரத்திலிருக்கும் உம்மைப்போன்ற ஆச்சார்யஸ்வாமிகள் சும்மா இருப்பார்களா? வேடன் ஒருவன் தன் குலத்தொழிலான வில் வித்தையில் வல்லவனாக இருக்கிறான் என்பதற்கே, அவனுடைய கட்டைவிரலை வாங்க வந்தீர்கள்!, அதிலும் தன் குலத்தொழிலைவிட்டுத் தவம் செய்ய அவன் வந்தானென்றால், என்ன செய்திருப்பீர்கள்! "வேடன் தவம்செய்வதா அது கூடாது சாஸ்திரவிரோதமான காரியம்!" என்று க்ஷத்திரியர்களுடன்வந்து, அவன் தலையை அறுத்து எடுத்துக்கொண்டு போய்விட மாட்டீர்களா?

ஏக : தவஞ் செய்தல்ல, சிறிய தச்சுவேலை செய்து இந்தக் கட்டைவிரலை நான் பெற்றேன்! ஒரு மரத்துண்டைக் கட்டைவிரல்போலச் செதுக்கி, கையுடன் சேர்த்துக் கட்டியுள்ளேன்! கட்டைவிரல், உண்மையில் இதுதான் கட்டைவிரல், கட்டையாலான விரல்!

கர்ண : பார்த்தீர்களா, குருதேவரே! கட்டைவிரலை எடுத்தால் அவன் வில்வித்தை

டாம், கர்ணு! ஏகலைவனை அழைத்து வராதே! மற்றவர் வீசும் அம்புகளைவிட கட்டைவிரலை இழந்தவன் வீசும் பார்வை அம்புகள் என் மனதில் தாங்கமுடியாத புண்ணை உண்டாக்கும்! அந்திய காலத்தில் சற்று அமைதியுடனுவது நான் இறக்கிறேன்!

கர் : ஹே! துரோணச்சாரியாரே! வில்வீரன் ஏகலைவனுக்கு நீர் செய்த தீங்கு மிகப் பெரிது! அவன் காட்டுமிராண்டியாக இருந்தாலும், நம்மைவிடக் கண்ணியம் உள்ளவன்! நமக்கு ஆபத்தான நேரத்தில் உதவிசெய்யத் தவறமாட்டான்! நிஷாத புரத்து வில்வீரர்கள் துணைவந்தால் கௌரவ சேனைகளுக்கு நல்ல பலம் தானே! அதோ! ஏகலைவனும் வருகிறுன்! (துரோணர் திடுக்கிட்டுச் சற்று எட்டிப்போய் நிற்கிருர். ஏகலைவனும் வனதத்தனும் வருகிருர்கள்.)

ஏக : வணக்கம், கர்ண! நானும் என் நண்பனும் காட்டில் வெகுதூரம் உள் சென்றிருந்தோம்! அதனுல் உன் அழைப்பு வந்தவுடன் புறப்பட்டுவர முடியவில்லை! சேனையின் பலாபலங்கள் எப்படி இருக்கின்றன? என்னுடன்வேடர்குல வில்வீரர்கள் அனைவரும் அணிவகுத்து வந்துள்ளனர்! (துரோணச்சாரியார் தூர நிற்பதைப் பார்த்து) துரோணச்சாரியார் இங்கு எப்படி வந்தார்? அருச்சுனன் பக்கமல்லவா அவர் இருந்திருக்கவேண்டும்! வில்வித்தையின் குருவே! எனது வணக்கம்!

வன : வில் வீரர்களின் கட்டைவிரலை வாங்கிடும் கருணமூர்த்தியே! வணக்கம்!

துரோ : வேதனைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்! மேலும் என்னை வேடிக்கை பேசித் தாக்காதீர்கள்! ஏகலைவா! என்னை மன்னித்துவிடு! உனக்கு மாபாதகம் செய்துவிட்டேன்! கட்டைவிரலைக் காணிக்கையாக வாங்கி, உன் வில்வீரத்தை அழித்துவிட்டேன்! அதுவும் நானுகச் செய்யவில்லை, அருச்சுனனுக்காகச் செய்தேன்!

வன : அன்று சொன்னுர் 'நானுகக் காணிக்கை' கேட்கவில்லை! ஏகலைவன் தானுக வந்து காலடியில் விழுந்து வணங்கிக் காணிக்கை பெற்றுப்போகும்படி வேண்டினன். அதனுல் கேட்டேன்' என்று. இன்று 'நானுகக் காணிக்கை கேட்கவில்லை, அருச்சுனன் வேண்டிக்கொண்டதால் செய்தேன்' என்கிருர். இவர் தானுக எதுவும் செய்வது கிடையாது போலிருக்கிறது. எல்லாம் மற்றவர்கள் செய்யச் சொல்வதால்தான்!

ஏக : குருவே! எது எப்படியிருப்பினும், என் கட்டைவிரலை நீங்கள் கேட்டதும் உண்மை, நான் அதைக் காணிக்கையாக் கியதும் உண்மை! கட்டைவிரல் போனுல் என் வில்வித்தை அழிந்துவிடுமென்று நினைத்தீர்களே, அது தவறு என்று நிரூபிக்கவே இந்தக் குருக்ஷேத்திர யுத்தத்தில் கலந்துகொள்ள வந்தேன்! (வில்லை வளைத்து, நாணேற்றி, ஒரு அம்பை விடுகிருன்.)

துரோ : (ஆச்சரியத்துடன் ஏகலைவன் கையைப்பற்றி) என்ன, கட்டைவிரல் இருக்கிறதே! எப்படி வந்தது? தவம் செய்து வரம் வாங்கினுயா? அல்லது தானுக வளர்ந்துவிட்டதா?

வன : ஏகலைவனுல் எப்படித் தவஞ்செய்து வரம்பெறமுடியும்? அவன் வேடன், சூத்திரன்! அவனது குலத்தொழில் என்ன, குலதர்மம் என்ன? அதைவிட்டுப் பிராமணேத்தமர்களின் தொழிலான தவத்திற்கு வரலாமா? வந்தால்தான் ராஜ்யாதிகாரத்திலிருக்கும் உம்மைப்போன்ற ஆச்சார்யஸ்வாமிகள் சும்மா இருப்பார்களா? வேடன் ஒருவன் தன் குலத்தொழிலான வில் வித்தையில் வல்லவனுக இருக்கிறுன் என்பதற்கே, அவனுடைய கட்டைவிரலை வாங்க வந்தீர்கள்! அதிலும் தன் குலத்தொழிலைவிட்டுத் தவம் செய்ய அவன் வந்தானென்றுல், என்ன செய்திருப்பீர்கள்! "வேடன் தவம்செய்வதா அது கூடாது சாஸ்திரவிரோதமான காரியம்!" என்று க்ஷத்திரியர்களுடன்வந்து, அவன் தலையை அறுத்து எடுத்துக்கொண்டு போய்விட மாட்டீர்களா?

ஏக : தவஞ் செய்தல்ல, சிறிய தச்சுவேலை செய்து இந்தக் கட்டைவிரலை நான் பெற்றேன்! ஒரு மரத்துண்டைக் கட்டைவிரல்போலச் செதுக்கி, கையுடன் சேர்த்துக் கட்டியுள்ளேன்! கட்டைவிரல், உண்மையில் இதுதான் கட்டைவிரல், கட்டையாலான விரல்!

கர்ண : பார்த்தீர்களா, குருதேவரே! கட்டைவிரலை எடுத்தால் அவன் வில்வித்தை

யென்று நினைத்த அந்த மண்டைக்கர்வி அருச்சுனன், ஏகலைவனுக்குமுன் நிற்க மாட்டாமல் ஓடினான் என்பது ஆறுதல் தான்! ஆனால் மற்றொரு விதத்தில் புதிய வேதனை! அருச்சுனன் என்னிடம் வில் வித்தை பயின்றவன்; அவன், என்னைப் போன்ற ஆச்சாரியார் எவருமில்லாமல் வில்வித்தை பழகிய ஏகலைவனுக்கு முன னால் நிற்கமுடியாமல் போனானென்றால், எனக்குத்தான் என்ன பெருமை? குருசிட சம்பிரதாயத்துக்குத்தான் என்ன மதிப்பு? அருச்சுனன் என் பிரதம சிடன் என்றாலும், அவன் எதிர்ப்பக்கத்தில் நின்று நான் போராடுகிறேன். ஆதலால் அவன் தோல்வியடைவதை வரவேற்பதுதான் முறை!

(போகிறார். திரை விழுகிறது.)

ஏழாவது காட்சி

(குருக்ஷேத்திர யுத்தகளத்தின் மற்றொரு பகுதி. அருச்சுனன் வேகமாக வருகிறான். பின்னால் கிருஷ்ணன் வருகிறார். அருச்சுனன் கோபத்துடன் காணப்படுகிறான்.)

அரு : கிருஷ்ணபரமாத்மா! ஏனிப்படித் தேரைத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டீர்கள்? ஏகலைவன், காட்டிலே வேட்டையாடித் திரிபவன், அவன் போர்முனையில் வருகிறானென்றால், எதிர் நின்று தக்க பாடங்கற்பித்திருக்கவேண்டாமா? கேவலம் அந்தக் காட்டுமிராண்டி, ஒரு சூத்திர வில்வீரனுக்குப்புறங்கொடுத்து க்ஷத்திரிய வீரனாகிய நான் வந்துவிட்டேனே? அவ்வாறு வந்த என்னைக் கோழையென்றல்லவோ யுத்தகளம் முழுவதும் பேசிக்கொள்வார்கள்! இதற்கு நான் காண்டிபத்தைப் பெற்று என்ன பயன்? அஸ்திர வித்தையைக் கற்று என்ன பயன்? எல்லாவற்றையும். பிரபு! நீங்கள் வீண் என்று ஆக்கிவிட்டீர்களே!

கிரு : பார்த்திபா! பதற்றமடையாதே! ஏகலைவன் காட்டில் வேட்டையாடுபவனென்றாலும், வில்வித்தையில் சிறந்த பயிற்சியுடையவனென்று தெரிகிறது.

அரு : அவன் தானாகச் சிறிது வில்வித்தை கற்றுக்கொண்டான். அதுவும் அவன் கட்டைவிரலை இழந்ததற்குப் பின் போய் விட்டது! பரமாத்மா! ஏகலைவனின் கட்டைவிரலைத் துரோணாச்சாரியார் ஒரு சமயம் காணிக்கையாக வாங்கிவிட்டார் என்பது உங்களுக்குத் தெரியாது!

கிரு : தெரியும்! ஏகலைவன் கட்டை விரலைத் துரோணர் வாங்கினதும் தெரியும்! துரோணாச்சாரியாரை யார் தூண்டிவாங்கச்சொன்னார்கள் என்பதும் தெரியும்! கட்டைவிரலை அறுத்தபிறகு, அவன் வில்வித்தையை அழித்து விட்டோமென்று நினைத்துக்கொண்டு நீங்கள் வந்துவிட்டீர்கள். அதற்குப்பின் ஏகலைவன் என்ன ஆனான் என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் கவலையும் படவில்லை. கட்டைவிரலை யிழந்ததும், வேறெந்த வில்வீரனும் வில்லை மறந்துவிடுவான். ஆனால் ஏகலைவனோ, முயற்சி குன்றாதவன், கட்டைவிரலை யிழந்தும் வில்லைக் கைவிடவில்லை. முன்பு எவ்வளவு திறமை யிருந்ததோ. அதைக் காப்பாற்றி வருகிறான், கையில் பொய்க் கட்டைவிரலை மாட்டிக்கொண்டு!

அரு : கிருஷ்ணபரமாத்மாவே! இவனைவிடச் சிறந்த வில்வீரர்களை நான் இந்தப் போர்க்களத்தில் எதிர்நின்றுபோராடவில்லையா? குருசிரேஷ்டரும், பெரிய வில்லைத் தாங்கியவரும், பராக்கிரமும் தைரியமும் உடையவருமான பீஷ்மரை நான் என் அம்பினால் வீழ்த்தவில்லையா? தனுர் சாஸ்திரத்துக்கு அதிகாரிகளாக விளங்குகின்ற துரோணாச்சாரியாரையும், கிருபாச்சாரியாரையும் நான் போராடி வெருட்டியதில்லையா? பரசுராமனுடைய சீடனும், இன்றுகௌரவசேனையில் சிறந்த வில்வீரனென்று கருதப்படுபவனுமான கர்ணனை இந்தப்போர்க்களத்தில்வெல்வேனென்று சபதமெடுத்துவரவில்லையா? பீஷ்மரையும், துரோணரையும், கிருபாச்சாரியாரையும், கர்ணனையும் எதிர்த்து நின்ற எனக்கு, இந்த ஏகலைவன் எம்மாத்திரம்?

கிரு : தனஞ்சய! அப்படிச் சொல்லிவிட முடியாது! பீஷ்மரும், கிருபரும், துரோணரும், கர்ணனும் முனபு உனக்கு அறிமுகமானவர்கள்! அவர்களுடைய வித்தையும், யுத்ததந்திரங்களும் முன்பாகத் தெரியும். அதனால் அவர்களை எதிர்நின்று யுத்தம் செய்யமுடிந்தது. ஏகலைவன் உனக்குப் புதிது! அவனுடைய வில்லின் தன்மையை நீ அறியமாட்டாய்!

(தொடரும்)



கோட்டுக்கு அளவு எடுக்கும் முறை

கோட்டுக்கு நீள அளவு, சுற்று அளவு என இருவகைப் படும். முதலில் நீள அளவையும் பிறகு சுற்று அளவையும் எடுக்கவேண்டும். வெஸ்ட் கோட் அல்லது மேல்சட்டை (ஷர்ட்) யின்மீது கோட்டுக்கு அளவு எடுக்கவேண்டும்.

குறிப்பு:—பழைய முறைப்படி கோட்டுக்குத் தோள் அளவு எடுப்பது கிடையாது. காரணம் பாதி முதுகு அளவைக் கொண்டு தோள் அளவை கணக்கிட்டுக் கொள்வது உண்டு. எளிதான முறையில் கோட் வெட்டுவதற்கு வேண்டிய அளவுகளில் தோள் அளவும் மிக முக்கியமாகும். ஆகவே தோள் அளவு எடுப்பதை மேல் சட்டை (ஷர்ட்) அளவு எடுக்கும் முறையில் உள்ள விளக்கப்படி தோள் அளவு எடுத்துக்கொள்ளவும்.

1. இடுப்புவரை முதுகு நீளம் (இயற்கை இடுப்பு)

1-ல் இருந்து (இயற்கை இடுப்புவரை) 2 வரை இடுப்பு வரை முதுகு நீள அளவு எடுப்பதை படத்தில் காட்டி உள்ள படி எடுக்கவேண்டும்.

2, முழு நீளம்

1-ல் இருந்து 3 வரை முழுநீள அளவு படத்தில் காட்டி உள்ளபடி, அணிபவரின் விருப்பப்படி கூட்டியோ, குறைத்தோ அணிபவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு எடுக்கவேண்டும்.

3. பாதி முதுகு அளவு (அக்ராஸ்பேக்)

4-ல் இருந்து 5 வரை பாதி முதுகு அளவு (அக்ராஸ்பேச்) படத்தில் காட்டி உள்ளபடி எடுக்கவேண்டும்.

4. முழங்கை அளவு (பாதி முதுகிலிருந்து முழங்கை முட்டி வரை)

4-ல் இருந்து 5, 6, வரை (தொடர்ந்து) முழுங்கை முட்டி அளவு படத்தில் காட்டி உள்ள படி எடுக்கவேண்டும்.

5. முழுநீளக் கை அளவு

4-ல் இருந்து 5, 6, 7 வரை (தொடர்ந்து) முழுநீளக் கை அளவு படத்தில் காட்டியுள்ள படி எடுக்க வேண்டும்.

(தொடரும்)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்திருக்காது. நம் நாட்டில் 1000 குழந்தைகள் உயிருடன் பிறந்தால், ஏறத்தாழ 120 குழந்தைகள் ஓராண்டு முடிவிற்குள் இறந்து விடுகின்றன. 1000 தாய்களுக்கு உயிருடன் குழந்தை பிறந்தால் அவர்களில் பிள்ளைப் பேறு காரணமாகக் கிட்டத்தட்ட 10 தாய்மார்கள் இறக்கின்றனர்.

அளவோடு குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டுமானாலும், நாட்டின் செல்வங்களாகிய பிள்ளைகளும் பெண்களும் பாதுகாக்கப்பட வேண்டுமானாலும், பொதுமக்களும்—அரசாங்கமும்—டாக்டர்களும் ஒத்துழைத்து நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத குடும்பக்கட்டுத் திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

Regd. No. M 6296

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :-வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.

எழுதியவை

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0— 3—0

இரா. செழியன் M. A.

எழுதியவை

ராஜாதி ராஜா	0—12—0
பொது அறிவு	0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு :

நிர்வாகி, மன்றம் பதிப்பகம்,
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

நம் நாடு

[தி. மு. க. வின் ஒரே நாள் இதழ்]

ஆசிரியர் : அறிஞர் அண்ணாதுரை

தி. மு. க. கிளைகளும், தி. மு. க. தோழர்களும் "நம்நாடு" வாங்குவதைத் தமது கடமைகளில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கருதுவார்களாக!

"நம் நாடு" வளர்ச்சியே கழக வளர்ச்சி என்பதைக் கழகத் தோழர்கள் உணர்வார்களாக!

இன்றே "நம் நாடு"விற்குச் சந்தாதாரராகச் சேருங்கள்!

ஆண்டுக் கட்டணம்	ரூ.	24—0—0
ஆறு திங்கள் ,,	ரூ.	12—0—0
தனி இதழ்	ரூ.	0—1—0

நிர்வாகி, "நம் நாடு",
'அறிவகம்'
இராயபுரம் :: சென்னை-13.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS.